V 6 . No. 41 19. Oct 1933

JL
00211, N28 KN
N33.6.41.
18965

**KALANILAYAM** தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:— வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR ... 23 MAY 1934 M.A.D.

Vol 6 ] 1933 ஹ அக்டோபர் மீ 19உ [No. 41

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 741
2. தமிழ்ப் பாடம் அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்தந்தாதி 743
3. மானத சாத்திரம்—உன்னிப்பும் அக்கரையும் வித்துவான் T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A.,B.L., 745
4. அப்பர் (64 கலை-வியாகரணம்-சந்தம், மாத்திரை) E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 746
5. கலித்தொகை (பாலைக்கலி, 30) T. A. கனகசபாபதி முதலியார் 747
6. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 10-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 748
7. யாப்பிலக்கணம்—கூன், விகாரம் வித்துவான், M. V. வேணுகோபாலப் பிள்ளை 749
8. காற்றுமழை (அங்கம் 5. களம் 1.) Shakespeare's Tempest 751
9. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்) T. N. சேஷாசலம் B.A.B.L. 753
10. வர்த்தமானம் 756

## கலாநிலயம்

189165

### தோற்றமும் இருக்கையும்.

முன் இறந்தோர் எத்தனை எத்தனையோ, இன்று இருப்பார் எத்தனை எத்தனையோ, இனிப் பிறப்பார் எத்தனை எத்தனையோ, இன்னதோர் கணக்கிறந்த கும்பலுக்கிடையே, மைந்த, உன்னை நீ என்னென்று கருதி நகுகின்றாய் அழுகின்றாய், உவக்கின்றாய் வெறுக்கின்றாய், துணிகின்றாய் அஞ்சுகின்றாய், வெருள்கின்றாய் தணிகின்றாய், ஓடுகின்றாய் துரத்துகின்றாய், பணிகின்றாய் முனிகின்றாய், ஈகின்றாய் ஏற்கின்றாய்,... ஈறிலாவகை இயங்கி யியங்கி எண்ணில் பல்கோடி இயற்றுகின்றாய், அதனினும் அதிகம் நினைக்கின்றாய்? என்னும் இக்கேள்வி வித்தகத்தின் முகத்தில் எஞ்ஞான்றுந் தோன்றி நிற்கின்றது. தத்துவநூல்கள் பலப்பல இதற்குப் பற்பல வகைகளில் விடையளிக்க முயன்றிருக்கின்றன. கேட்கின்ற முறைமையில் அறிவும் தெளிவும் குறைவற நிறைந்திருக்கின்றதேனும், அறிவும்தெளிவும் வாய்ந்த விடையோ இதுகாறும் வெளிவந்ததில்லை. எனினும், விடை வாய்க்காமையால் இதனைக்கேட்கின்ற வித்தகம் பயனற்றதென்றுகொள்ளல் பெரும் பிழை. உண்மை வித்தகமானது, இக்கேள்விக்கு விடையொன்று வேண்டும்என்னும் நினைவையுங் கடந்து உய்ந்துவிடும். வித்தகக் கேள்விக்கு விடையொன்றும் அவசியமில்லை. எண்ணங்களை ஒரு முகப்படுத்தி வாழ்க்கையை உயர்த்துகின்ற அளவிலேயே தத்துவநூலாராய்ச்சியின் நன்மை அடங்கி யிருக்கின்றது. அதுவே போதும்.

தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்ற அறிவானது மிகவும் நுணுகிநுணுகிப் பார்க்கப் பயின்று அணுவையும் துளைத்து நோக்கவல்லதாகின்றதேனும், எளிதினும் எளியதாய்த் தென்படும்படி வெளிநிற்கும் சிலவற்றைக் காண்பதின்றியே கடந்துவிடுகின்றது. 'நான் யார்' என்ன வினவிவினவித் துருவுகின்ற தத்துவ ஆராய்ச்சி எதிர்வழக்கு எண்ணிறந்தன விளைவித்திருக்கின்றதே யன்றி, உய்த்துணர்வதற்குரியவோர் முடிவினை இதுகாறும் எவ்விடத்தும் எடுத்துரைத்ததில்லை. தத்துவ ஆராய்ச்சி இந்நாள் நிற்கின்ற நிலை இது. இதனைக் கடந்து அப்பாற் செல்லமாட்டாமை அதனில் ஈடுபட்டிருப்பவர்களுள் பெரும்பாலோர் கடன். எனினும், சொல்லால் முழங்குகின்ற இந்தத் தத்துவ ஆராய்ச்சியைக் கடந்தவோர் வித்தக நிலையை ஒவ்வொருபோது ஒரு சிலர் ஆங்காங்கு அடைவது உண்டு. அவர்களும் முதலில் 'நான் யார்' என்று வினவியே தம் சிந்தையைத் தூண்டத் துவக்கியிருக்கலாம். எனினுர், அவ்வாராய்ச்சிகள் எய்தாத முடிவைத் தாம் எய்தினவர்போல் பாவிக்காமல், "நான் யாராயிருப்பினென், நான் நானே அல்லனே" என்பதைத் துணிந்து உணர்கின்றனர். நான் நான்தான் என்னுந் தன்மையை மிக எளிதில் நினைப்பதைவிட்டு வேறுள பலப்பல சிந்தித்து உழல்வானேன்! இந்த முடிவை எய்துவதைவிடச் சுலபமானது வேறொன்றுமில்லை; எனினும் தத்துவ ஆராய்ச்சியாளரில் எண்ணிறந்தோர் வெள்ளிடை மலையெனக் கிடக்கும் இம்முடிவைக் காணாதது என்ன கண்மாயமோ. மற்று, வித்தகமோ, இதனைக்கண்டுவிடுகின்றது. இதனைக்கண்டபின் வேறு சில கேள்விகளை எழுப்புவதற்கு அது விரும்புவதில்லை. அந்த அறிவினுள்ளேயே அமைதி அனைத்தையும் நாடிக்கொண்டு அல்லலில்லா ஆன்மசெல்வத்தவர் ஆகின்றார் வித்தகர்.

இவ்வளவு எளியதாய முடிவைப் பயன்பெற எய்த மாட்டாமல் மானுட மனத்தைத் தடுப்பதற்குக் காரணமாயிருக்கின்ற மயக்கத்தின் தன்மையைச் சிறிது ஆராய்தல் அம்மயக்கத்தினின்று தெளியும்வண்ணம் ஓரளவு உதவலாம்—

நிகிலப்பொருள்கள் நமக்கு எவ்வண்ணந் தோன்றுகின்றனவோ அவ்வாறுதான் உண்மையாக இருக்கின்றனவோ, அல்லது நம்முடைய சார்பு இன்றியே அவைகளுக்கே உரிய இயற்கைத் தன்மைகள் இருக்கின்றனவோ என்னும் இரகசியத்தைத் தேர்தல்வேண்டும். நீலம் என்பது நிறத்தைக் குறிக்கும் ஓர் பண்புச் சொல். ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கும்போது மானுடக் கண்கள் பெறுகின்ற ஓர்வகை நிற உணர்ச்சியே 'நீலம்' என்னும் சொல்லின் பொருள் எனத் தத்துவ சாத்திரிகள் கூறுவார். இதுவுமன்றி, பொருளின்பால் நம் கண்களைச் செலுத்தும்போதுதான் இவ்வுணர்ச்சி நமக்கு உண்டாகின்றதாகையாலும், ஒருவரும் பார்க்காதிருக்கும்போது அப்பொருளினால் அவ்வகை உணர்ச்சி யொன்றும் விளைவதில்லையாகையாலும், பார்க்கப்படாத போது ஆகாயம் என்னும் அப்பொருள் நீலநிற முடையதாக இருப்பதில்லை என்று மேலுங் கூறுவார் அவர். இதன்படி, பொருள்களின் தன்மைகள், அப்பொருளினை மட்டுமேயன்றி வேறு சிலவற்றையுஞ் சார்ந்திருக்கின்றன என அவர் சொல்கின்றனர். சர்க்கரை தித்திக்கும் என்று நாம் சொல்கின்றோம். அது தித்திக்க வேண்டுமாயின் அதனைச் சுவைப்பதற்கு வேறு ஒருவனும் வேண்டுமன்றோ? சுவைக்கும்போதுதான் சர்க்கரை தித்திக்கின்றது; சுவைக்கின்ற சக்தி நாக்கிற்கு இல்லையாயின், சர்க்கரைக்குந் தித்திக்கின்ற தன்மையில்லை, எனச் சாற்றுகின்றார்.

இத்தகைய கருத்துக்கள், சொற்களை இயக்குகின்ற திறமையைச் சாலக் காட்டுகின்றன. இவைகளைநம்பிவிட்டால் இதற்கு அடுத்திருக்கின்ற படியில் ஏறுவது மிகச்சுலபம். பொருள்கள் தம்வரையில் எத்தன்மையனவாயிருக்கின்றன என்பது ஒரு விஷயமன்றாளென்றும், அவை நமக்கு என்ன ஆகின்றனவோ அதனைப் பற்றித்தான் நாம் விவகரிக்கவேண்டுமென்றும் சாதிக்கப்புகுவது இயற்கையாகின்றது; நமக்குத் தோன்றும் வண்ணமே பொருள்களின் உண்மையாம் என்னும் முடிவை எளிதில் எய்திவிடுகின்றனர். இம்முடிவினால் பிறக்கின்ற பயன் மிகவும் மயக்கத்திற்கு இடமானது; நம்முடைய தன்மையை அறிவதற்கு மிக்க இடையூறுஞ் செய்கின்றது.

ஒரு பொருளின் உண்மை அதன் தன்மையின்படியே யல்லாமல் நமக்குத் தோன்றுகின்றபடியே தான் இருக்கின்றது என்னும்எண்ணம் நிலைத்துவிடுமாயின் பிறகு நாம், நம்முடைய சூழ்ச்சித் திறமையாலும், அகங்காரத்தினாலும், சுயநயச் சிந்தையாலும், மடமையாலும், செருக்கினாலும், நிகிலப் பொருள்கள் அனைத்தும் நாம் பார்க்கும் வண்ணத்தையும் நினைக்கும் வண்ணத்தையும் சார்ந்திருக்கின்றனவென்று நம்பி, நாம் பார்ப்பதும் நினைப்பதும் தவிர வேறொன்றும் இல்லையென்று சொல்லவும் தலைப்படுகின்றவர்களாகின்றோம். இதனின்று விளையும் நினைவு செய்யும் சதியோ சிறியதன்று. பொருள்களெல்லாம் நம்மைச் சார்ந்தல்லது தமக்கொரு தனிநிலை பெற்றிருக்கவில்லை என்றுஎண்ணுகின்ற மனது, மெல்லமெல்ல, தன்னையறியாமலே, பொருள்களைச் சார்ந்தல்லது நமக்கும் ஒரு தனிநிலை இல்லையென்று நினைக்கப் புகுவதால், 'நான் நானேயாக இருக்கின்றேன்' என்னும் வித்தக உண்மையை நாடாமல், ஏனையோர்க்கு நான் எவ்வாறு தோன்றுகின்றேனென்றும் யாவது ஆகின்றேன் என்றும் மதித்து நாம் உழல்கின்றவர்களாகி, கடவுள் படைக்காத துன்பங்களை நாமே படைத்து அவைகளை மேற்கொண்டு நனிவருந்திப் பிறகு அவ்வருத்தத்தினின்று விடுதலையடைவதற்காக 'நான் யார்' என்ற விசாரணையில் ஆழ்ந்து கரைகாணமாட்டாமல் 'பழைய கந்தனே கந்தனு'த் தீர்கின்றோம்.

இத்தகைய மயக்கக் குழப்பங்களிலிருந்து தெளிவதற்கு ஒரு சிறு நினைவினை உட்கொண்டால் அது நமக்குப் பெரிது கைதந்துதவும். 'நீலம்' என்னும் சொல், ஆகாயமானது மனிதரது கண்களில் தூண்டுகின்ற உணர்ச்சியைக் குறிப்பதன்று; தித்திப்பு என்பது சர்க்கரையானது மனிதர் நாக்கில் தூண்டுகின்ற உணர்ச்சியைக் குறிப்பதன்று. மற்று, 'நீலம்' என்பது கண்களில் தூண்டக்கூடிய ஒரு சக்தியைக் குறிக்கின்றது. தித்திப்பு என்பதும், சர்க்கரையானது மனிதர் நாவில் தூண்டக்கூடிய வோர் சக்தியையே குறிக்கின்றது. உணர்ந்து நுகர்வதற்கு மனிதர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்தப்பொருளில் அந்தச்சக்தி இருக்கின்றது. நாம் பார்க்காதபோது நீலநிறத்தை நாம் காணாமையாலும், நாம் சுவைக்காதபோது தித்திப்பு நுகராமையாலும், ஆகாயத்திற்கு நீலநிறம் இல்லை என்றும் சர்க்கரைக்குத் தித்திப்பு இல்லைஎன்றுஞ் சொல்லலாமோ! அவைகளுக்கு அந்தச் சக்தி எப்பொழுதும் இருக்கின்றது. அதனைப் படைத்தவர் அதன் அணுக்களை அவ்வாறு அமைத்திருக்கின்றார். தத்துவநூலாசிரியர் எது கூறின் என்! ஆகாயம் எப்பொழுதும் உண்மையே நீலமானது, சர்க்கரை தித்திப்புடையது. நீலமாய் அது நமக்குத் தோன்றாத காலத்திலும், இது நமக்குத் தித்திக்காத காலத்திலும், பிழை நம்முடையதே யன்றி, ஆகாயத்தினுடையதன்று, சர்க்கரையினுடைய தன்று.

ஆதலின், ஒரு பொருளைக் குறித்து நாம் வழங்குகின்ற வாசகத்தைச் சிறிது மாற்றிக்கொள்வது நலம். ஒரு பொருள் நமக்கு இவ்வாறு 'காணப்படுகின்றது' என்பதற்குப்பதிலாய், அது இவ்வாறு இருக்கின்றது என்று எண்ணப் பயில்வோமாயின், நமது மனம் மிக்க தெளிவடைந்ததாகும். ஆகாயமானது நீலமாகத் தோன்றுகின்றது என்ன வேண்டா, நீலமாகியே இருக்கின்றது என்று கொள்ளலாம். இப்படியே, ஒன்றினை நான் இவ்வாறு காண்கின்றேன் என்பதற்கு மாறாக, இவ்வாறு நான் காணும்படி அது இருக்கின்றது எனச் செப்புதல் உண்மையாம். இந்தப் பயிற்சியால், நிகிலப் பொருள்கள் நம்மைச் சார்ந்தே தோன்றுகின்றனஎன்னும் பொய்நினைவு நீங்கி, அவைகள் தாம் தம் வரையிலே சில தன்மைகளையுடையனவாகி இருக்கின்றன என்னும் மெய்ம்மை விளங்க வரும். இன்னபடி நாம் பிறபொருள்களுக்கு நம்மைச் சாராத தனித்தன்மையை அளிக்கும் வழக்கத்தால் அவைகளைச் சாராத தனித்தன்மை நமக்கும் உளதென்று உன்னி விவகரிக்கும் நன்மையை எய்தினவர்களாவோம். அதுதான் நான் நானாக இருக்குந்தன்மை. தத்துவமுறைகளினின்று கடைந்தெடுத்த வித்தகம் இது. வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணத்தின் குழூஉக்குறி இதுவே.

இவ்வண்ணம் 'நான் நானே' என்று நினைக்கப்புகுகின்ற முயற்சியில், பிறரும் அவரவர் அவரவர்களாகவே இருக்கின்றனர் என்று நினைக்கும் பயிற்சி மிகவும் நெருங்கிப் பிணைந்திருக்கின்றது. பிறர் பிறராயிருக்குந் தன்மையைக் காட்சிகொண்டு காட்டவல்ல திறமையோர், ஷேக்ஸ்ப்பியர் கம்பர் அனைய புலமை வாய்ந்த பெரியோர். ஆதலாற்றான் அன்னவர்தம் உறவினுக்கு அவாவுறுமாறு புரிய நனி முயல்கின்றது நம் கலாநிலயம்.



# தமிழ்ப்பாடம் 91.

## அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்தந்தாதி

[735-வது பக்கத் தொடர்ச்சி]

தனமாத ரஞ்சொற் குதலைப் புதல்வர்
தரணியில்லந்
தனமா தரஞ்செயும் வாழ்வஞ் சியேதஞ்ச
நீயெனப்போந்
தனமா தரங்கிக்க வெற்பெடுத் தாய்தண்
ணனந்தசிங்கா
தனமா தரங்கமுள் ளாயரங் காமுத்தி
தந்தருளே 3.

பதப்பிரிவு:—தனம் மாதர் அம் சொல் குதலை புதல்வர் தரணி இல்லம் தனம் ஆதரம் செய்யும் வாழ்வு அஞ்சிஏ தஞ்சம் நீ என போந்தனம் ஆ தரங்கிக்க வெற்பு எடுத்தாய் தண் அனந்த சிங்காதன மா தரங்கம் உள்ளாய் அரங்கா முத்தி தந்து அருளே.

பதவுரை.

தனம் - முலைகளையுடைய, மாதர்-மாதர்களையும், அம் - அழகிய, குதலைச்சொல் - குதலைச்சொற்களால் பேசும், புதல்வர் - பிள்ளைகளையும்; தரணி - விளைநிலத்தையும்; இல்லம் - வீட்டையும்; தனம் - செல்வத்தையும்; ஆதரம்செய்யும் - ஆசைப்படும், வாழ்வு-இவ் வுலக வாழ்க்கைக்கு, அஞ்சி - பயந்து, நீயே - நீயே, தஞ்சம் என-அடைக்கலம் என்று, போந்தனம்-உன்னை அடைந்திருக்கின்றோம்,

ஆ - பசுக்கள், தரங்கிக்க (இந்திரன் பெய்வித்த கல்மழையினால்) கலங்கியபோது, (அவைகளைக் காக்கும்பொருட்டு) வெற்பு - கோவர்த்தனம் என்னும் மலையை, எடுத்தாய் - குடையாகத் தூக்கினவனே! தண் - குளிர்ச்சிபொருந்திய, அனந்த - ஆதிசேஷனை, சிங்காதன-சிம்மாஸநமாக உடையவனே! மா-பெரிய, தரங்கம் - (பாற்கடல், அல்லது காவேரியின்) அலைகளுக்கு நடுவே, உள்ளாய் - இருப்பவனே! அரங்கா - ஸ்ரீரங்கநாதனே! (எங்களுக்கு) முத்தி-மோக்ஷத்தை, தந்து அருள்வாய் - கொடுத்து அருள்வாயாக.

கருத்து:—"பெண் பொன் மண்ணாசைகளி லகப்பட்டு, அவ்வாசைகளால் வரும் துன்பத்திற்கே எங்களை ஆளாக்கும் இப்பிறவிக்கு நாங்கள் பெரிதும் பயந்து, நீயேயல்லால் வேறு கதி யில்லையென்று உன்னைச்சரணமடைந்தோம். திருவரங்கா, எங்களுடைய பிறப்பை அறுத்து முத்திதருவாய்" என்று கவி கடவுளை மானுட இனத்தின்பொருட்டு வேண்டிக்கொள்கின்றார்.

விளக்கம்:—இச்செய்யுளின் நான்கு அடியினும் யமகமாக வந்துள்ள எழுத்துக்கள், 'தனமாதர' என்பனவாகும். அவை,

முதலடியில்—தனம் மாதர் அ(ம்)......எனப் பிரியும். ஸ்தனம் என்ற வடமொழி தனம் என முதற் சொல்லாக வந்தது. இரண்டாவது சொல், மாதர். இந்தச் சொல்லின் ஈற்று மெய்யின்மேல் ஏறுகின்ற அ, என்னும் எழுத்து, பின்வரும் 'அம்' என்னும் சொல்லுக்கு முதலாகும்.

இரண்டாவது அடியில்—தனம் ஆதர(ம்)........ எனப் பிரியும்—இந்த அடியில் "அஞ்சியே தஞ்சம் நீ" என்று வருமிடத்தில் 'அஞ்சி' என்னும் சொல்லோடு சேர்ந்திருந்த ஏகார இடைச்சொல்லை அதைவிட்டுப் பிரித்து, 'நீ' என்பதோடு சேர்த்துப் பிரிநிலையாக 'நீயே' எனப் பொருள் கொண்டோம். (நீ+ஏ, என்பது ய் என்னும் எழுத்து இடையில் வர நீயே என ஆகும்.)

மூன்றாமடியில்—தனம் ஆ தர...ங்கிக்க, எனப் பிரிந்து, முதலிலிருக்கும் 'தனம்' என்னும் மூன்றெழுத்துக்களும், இரண்டாவது அடிக் கடைசியிலுள்ள 'போந்' என்பதோடு சேர்ந்து, 'போந்தனம்' எனும் தன்மைப் பன்மை வினைமுற்றாயிற்று. அதற்கு அடுத்தது, பசு என்னும் பொருளுடைய ஆ என்னும் ஓரெழுத்தொருமொழி. அப்புறமுள்ள தர என்பன, பின்வரும் ங்கிக்க என்பவைகளோடு சேர்ந்து தரங்கிக்க என்னும் சொல் ஆகும்.

நான்காமடியில்—தன, என்ற முதலிரண்டு எழுத்துக்கள் மூன்றாவது அடியின் கடைசியில் உள்ள 'சிங்கா' என்பதோடு சேர்ந்து, 'சிங்காதன' என்று ஆகின்றது. இதற்குச் 'சிம்மாதனமாக உடையவனே' என்பது பொருள். பின் வரும், மா என்பது பெரிய என்னும் பொருளுடைய உரிச்சொல். அதற்கப்புறம் இருக்கின்ற 'தர' என்னும் எழுத்துக்கள் 'தரங்கம்' என்னும் சொல்லைச் சேர்ந்தன.

---

தருக்கா வலாவென்று புல்லரைப் பாடித்
தனவிலைமா
தருக்கா வலாய்மயி லேகுயி லேயென்று
தாமதராய்த்
தருக்கா வலாநெறிக் கேதிரி வீர்கவி
சாற்றுமின்பத்
தருக்கா வலாயுதன் பின்றோன் றரங்கர்பொற்
றாளிணைக்கே. 4.

பதப்பிரிவு:—தரு காவலா என்று புல்லரை பாடி தன விலை மாதருக்கு ஆவல் ஆய் மயிலே குயிலே என்று தாமதர் ஆய் தருக்கா அலா நெறிக்கு ஏ திரிவீர் கவி சாற்றுமின் பத்தருக்கு (ஆ)க அலம்ஆயுதன் பின் தோன்று அரங்கர் பொன்தாள் இணைக்கு ஏ.

பதவுரை

தரு - கற்பகத்தருவிற்கு, காவலா - தலைவனான இந்திரனே, என்று - என்று, புல்லரை - அற்பர்களை, பாடி-இச்சகம்பாடி, (அவர்களிடம்பெற்றபொருளைக் கொண்டுபோய்) தனம் - முலைகளை, விலை - விலைக்கு விற்கும், மாதருக்கு - வேசியருக்கு, ஆவல் ஆய் - ஆவலை உடையவர்களாகி, மயிலே குயிலே என்று - மயிலே என்றும் குயிலே என்றும் (அம் மாதர்களை நயந்து கொடுத்துவிடும்), தாமதர் ஆய்-தாமதகுணம் உடையவராய், தருக்கா - களிப்புற்று, அலா - நல்லது அல்லாத, நெறிக்கே - வழியிலேயே, திரிவீர்-திரிகின்றவர்களே! பக்தருக்கு ஆ - பக்தர்களைக் காக்கும்பொருட்டு, அலம் ஆயுதன் - கலப்பையை ஆயுதமாக உடைய பலராமனுக்கு, பின் - தம்பியாக, தோன்று - பிறந்த, அரங்கர் - திருவரங்கருடைய, பொன் - அழகிய, தாள் இணைக்கே - இரண்டு பாதங்களைப்புகழ்ந்தே, கவி சாற்றுமின்-கவி பாடுங்கள்.

கருத்து:—கற்றகல்வியை நரஸ்துதி செய்வதற்கும், அப்படி இச்சகம்பாடிப் பெற்ற பொருளைக்கொண்டு சிற்றின்பங்களைத் தேடிப் பாராட்டுவதற்கும் பயன்படுத்துகின்றவர்களை நோக்கி, "இதற்குப் பதிலாய், நீங்கள் எம்பெருமானது திருவடிகளைப் புகழ்ந்துபாடி உய்ந்தாலாகாதோ" என்று கவி இரங்கிக் கூறுகின்றார்.

விளக்கம்:—தருக்காவலா, என்ற யமகவெழுத்துக்கள் முதலடியில், தரு காவலா என்ற இரண்டு சொற்களாகப்பிரியும். தரு, விருக்ஷம் என்ற பொருளுடைய பெயர்ச்சொல்; காவலா, எட்டாம்வேற்றுமை, காவலனாகிய இந்திரனே, என்பது பொருள்.

இரண்டாமடியில்—தருக்கு ஆவல் ஆ......எனப் பிரியும். தருக்கு என்னும்எழுத்துக்குள், முதலடியின் கடைசியிலுள்ள 'மா' என்னும் எழுத்தோடு சேர்ந்து மாதருக்கு, என்ற நான்காம் வேற்றுமைப் பெயர்ச்சொல்லாகும். அடுத்தசொல், ஆவல், (மாதருக்கு + ஆவல் = மாதருத் காவல், என்று ஆவதற்கு விதி இனிவரும் இலக்கணப் பாடங்களில் கூறுவோம்.) அதற்கு அடுத்தசொல்லாகும் ஆய், என்பதன் முதலெழுத்துஆ, முன்மொழி யிறுதியிலுள்ள ல் என்னும் மெய்யின்மேலேறி அதனை லா என ஆக்கியது.

மூன்றாமடியில்—தருக்கா அலா, எனப் பிரியும். தருக்கா என்பது தருக்கி என்னும் உடன்பாட்டுப் பொருளுடைய வினையெச்சம். சாதாரணமாய் எதிர்மறை உருவத்தில் உள்ள தருக்கா, செய்யா, உண்ணா என்பன போன்ற வினையெச்சங்கள் உடன்பாட்டுப் பொருளையுந் தரக்கூடும் என்பதை முன் (வால்யூம் 5 பக்கம் 83, 983) விளக்கியிருக்கின்றோம். அடுத்த பதம், அலா, என்பது. இது 'அல்லாத' என்று பொருள்படும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் (வால்யூம் 5. பக்கம் 46). தருக்கா + அலா, என்பன தருக்காவலா, எனப் புணர்ந்தன. ஏனெனில் நிலைமொழி யிறுதியில் ஆ என்னும் உயிர் வந்திருப்பதால், வருமொழி முதல் உயிரோடு சேரும்போது, இடையில் வ் என்னும் மெய்வர, அதன்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறு மென்பது நீங்கள் கற்றிருக்கிறவிதியாகும். தருக்கா + அலா = தருக்காவ் அலா = தருக்காவலா.

நான்காவது அடியில்—தருக்கு ஆ அலா, எனப் பிரியும். தருக்கு என்பது மூன்றாவது அடியின் கடையிலுள்ள 'பத்' என்பதோடு சேர்ந்து பத்தருக்கு என ஆகும். அப்புறம் வரும், ஆ என்பது ஆக என்னும் வினையெச்சத்தின் ஈறுகெட்ட உருவமாகும். (வால்யூம் 5-144-வது பக்கம். வால்யூம் 6-733-வது பக்கம்.) அலா, என்பன பின்வரும் 'யுதன்' என்பவைகளோடு சேர்ந்து 'அலாயுதன்' எனப் பலராமனைக் குறிக்கும் சொல்லாயின. ஹலம், என்ற வடமொழிக்குக் கலப்பை என்பது அர்த்தம். அது, தமிழில் (ஹரி, அரி எனவருவதுபோல்) அலம், என்றாயிற்று. அலம் + ஆயுதன், என்னும் இரண்டு சொற்களும், சமிஸ்கிருத மாகையால் அப்பாஷை இலக்கணத்தின்படி அலாயுதன் எனப் புணர்ந்தன.

குறிப்பு:—சென்ற ஆண்டு 34வது இதழிலிருந்து 50 வது இதழ்வரையில், பெயர்ச்சொற்கள் அடையக்கூடிய வேற்றுமைகள், அவ்வேற்றுமைகளுக்குரிய பொருள்கள், உருபுகள், முதலியனவற்றைப்பற்றி விளக்கினோம். அப்பாடங்களில், ஒவ்வொரு வேற்றுமைக்கும் தனித்தனி உருபுகள் வந்துஅவ்வவ்வேற்றுமைக்குரிய பொருளைக்குறிக்கும் என்பதைக் காட்டினோம். கு, என்பது நான்காம் வேற்றுமை உருபு. இந்த உருபு ஒரு பெயர்ச்சொல்லோடு சேருமாயின், அந்தச் சொல் நான்காம்வேற்றுமை யடைந்து, கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என்னும் பொருள்கள் ஒன்றினில் நிற்கவேண்டும்—(5வது, வால்யூம், 923வது பக்கம்.) எனினும், இந்தப்பாட்டில 3வது அடியில் வந்துள நெறிக்கு என்னும் சொல் கு உருபு பெற்றும் நான்காம் வேற்றுமைக்குரிய ஏழு பொருள்களில் ஒன்றும் ஏற்கவில்லை, என்பது புலப்படும். நெறியில் திரிவீர், என, ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருள்தான் அந்தக் கு உருபிற்கு ஏற்றதாகின்றது. ஆகையால் 'நெறிக்கு, என்பது நான்காம் வேற்றுமை உருபு பெற்றிருக்கும் சொல்லாயினும் அதனைப் பொருள் நோக்கி, ஏழாம் வேற்றுமை என்றே கூறவேண்டும். பொருள்பற்றி இன்ன வேற்றுமை என்று உணரவேண்டுமேயல்லாது முற்றிலும் உருபையே நம்பலாகாது. இப்படிப் பொருளும் உருபும் வேறுவேறாகப் பொருந்தாமல் வருமாயின் அதனை உருபு மயக்கம் என்பர்.

---

## இலக்கணம்

இதுவரையில் நிலைமொழியிறுதியிலும் வருமொழி முதலிலும் உயிர் வருமாயின் அவை புணர்வதற்குரிய விதிகளிற் சிலவற்றைச் சொன்னோம். இவ்விதிகள் அடங்கியுள்ள நன்னூல் சூத்திரத்தை மனப்பாடம் செய்துகொள்வது நலம். அது பின் வருமாறு:—

இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏ முன் இவ்விருமையும்
உயிர்வரின் உடம்படுமெய் என்று ஆகும்.

இதன் பொருள்:—இ ஈ ஐ வழி - இ ஈ ஐ என்ற நிலைமொழி ஈற்று உயிரெழுத்துக்களில் ஒன்றின் பின், உயிர்வரின் - வருமொழிமுதலில் உயிர் வருமானால், யவ்வும் - ய் என்னும் மெய்யெழுத்தும்; ஏனை உயிர்வழி - இ ஈ ஐ என்னும் உயிர்கள் தவிர மற்ற நிலைமொழி யீற்று உயிர்களின் பின், (உயிர்வரின் - வருமொழி முதலில் உயிர் வருமாயின்) வவ்வும் - வ் என்னும் மெய்யெழுத்தும், ஏ முன் - நிலைமொழி ஏ என்ற உயிரின்பின், இவ்விருமையும் - ய், வ், என்ற இரண்டு மெய்களும், உடம்படுமெய்என்று ஆகும் - உடம்படு மெய்யென்று வருவதாம்.

இச்சூத்திரத்தில் பொதுவாகக் கூறியிருப்பனவற்றைத் தனித்தனி எடுத்து இதுவரையில் விரித்துக் கூறிவந்தோம். இந்த வ், ய் என்ற மெய்கள், இவ்விதிகளுக்கிணங்கி இரண்டு உயிர்களைச் சேர்க்க வரும்போது, அவைகளை உடம்படுமெய் என்று கூறுவார். உடம்பாடு செய்விக்க வருவதால் அவைகளுக்கு அப்பெயர் வந்தது.

---



# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[737-வது பக்கத் தொடர்ச்சி]

என்னுடைய உந்து வண்டியில் (Motor car) நண்பர் ஒருவரோடு ஏறிச்செல்கின்றேன். இரைந்துகொண்டே ஓடுகின்றது அவ்வண்டி. திடீர் என முன்னில்லாத ஓசை ஒன்று மெல்ல எழுகிறது. வண்டியை ஓட்டிச் செல்லும் நான் அதனை எளிதில் உணர்ந்து "யாது" என ஆராய்கின்றேன். உந்து வண்டியை ஓட்டியறியாத எனது நண்பரோ அதனை யுணரவில்லை. நான் அதனை ஏன் உன்னிப்பாக நோக்குகின்றேன். எனது நண்பர் அதனைப்பற்றி உரைாமலே ஏன் போகின்றார்? என் வண்டியில் எனக்கு அக்கரையிருக்கிறது. வண்டி யோட்டுவதிலும் அக்கரை இருக்கிறது. ஆகவே அதனை உன்னிப்பாகக் கேட்கிறேன். அவருக்கோ அத்தகைய அக்கரையொன்றும் இல்லை. ஆகையால்தான் நம்முடைய அக்கரையினளவே நம்முடைய உன்னிப்பும் எனப் பலர் கூறுகின்றனர்.

காய்கறி வாங்கிக்கொண்டு போவதில் கண்ணும் கருத்துமாக இருப்பவரைப்பார்த்துக் குதிரைகளைப் பற்றி அறிவதில் அவர் அக்கரையுள்ளவர்என ஒருவர் கூறுகின்றார். இப்போது ஒன்றை ஒருவர் எண்ணிக்கொண்டிருக்கவும் வேறொன்றில் அவருக்கு அக்கரையுள்ளது என இவ்வாறு பலரும் கூறுகின்றனர். இங்கு அக்கரை என்றால் என்ன? குதிரையைப்பற்றி இப்போது அவர் எண்ணாமற்போனாலும், அது எதிர்வந்தாலோ அல்லது அதைப்பற்றிப் பேச்சு எழுந்தாலோ உடனே அவர் அவ்வழியில் மிகவும் உன்னிப்பாக இருப்பார் என்பதே நாம் கூற முன்வந்தது. அவ்வுன்னிப்பானது மாறாது நிலையாக இருக்கும்எனவும் கூறுதலே நம்முடைய கருத்து. ஏதேனும் ஒன்றில் ஒருவர் அக்கரை காட்டுகிறார் என்றால், அதிலே அவர் மனம் நீண்டபோது நிலைபெற்றிருக்கும் என்பதையல்லவா குறிக்கிறோம்.

பசி முதலிய இயற்கைச் செயனிலைகளை எவை எவை தூண்டிவிடுகின்றனவோ, அவ்வவற்றிலேதான் உயிர்களனைத்தும் அக்கரை காட்டுகின்றன. ஆயினும், நமது வேட்கையோ ஒருபடித்தாக இருப்பதில்லை. நமக்குப் பசித்தபோதுதான் உணவுப்பொருள்களின் மேல்வேட்கை எழுகிறது. பசிதணிந்ததும் அவ்வேட்கையுந் தணிந்துவிடுகிறது. பசியாக இருக்கும்வரை உணவுப் பொருள்களைத் தேடுவதில் அக்கரைகாட்டுகின்றோம். உன்னிப்பாக உழைக்கின்றோம். பசி தீர்ந்ததும், மறுபடியும் பசிக்கும்வரையிலும் அவ்வுணவுப் பொருள்களில் நம்முடைய அக்கரை குறைந்துவிடுகிறது. பசியாறிய பூனையின் வாலின்மேல் ஏறி விளையாடும் எலியும் உயிர்பிழைக்கும். இவ் வேட்கைநிலை மாறுபாட்டை மனதிலமைத்துக்கொள்வோமானால், இயற்கைச்செயனிலையைத் தூண்டுவனவற்றில்தான் உயிர்கள் அக்கரை காட்டுகின்றன என்றும், அவ்வக்கரையும் அவ்வியற்கைச் செயனிலையின்வன்மையைப் பொறுத்திருக்கின்றதென்றும் கூறுவதில் ஒன்றும் தவறில்லை.

மக்களிடையே அவர்களுடைய பழக்க வழக்கத்தால் இவ் வக்கரைநிலை மிகச் சிக்கலாகி நிற்பதைக் காண்கிறோம். இயற்கைச்செயனிலைகளே யன்றிப் பல செயற்கைச்செயனிலைகளும் வளர்கின்றன. காட்டில் வளரும்நாய் பச்சைத் தசையில் அக்கரைகாட்டினால், வீட்டில் பழகிவளர்கின்ற நாயோ பெருங்காயமிட்ட பருப்புக் குழம்பிலும் அக்கரைகாட்டத் தொடங்குகிறது. இப்படிப் பழக்கத்தினால் அல்லவா, கள் முதலியவற்றில் அக்கரை பிறக்கிறது. எனது உந்துவண்டியை ஓட்டிச் செல்கின்றேன். எனது நண்பர்கள் இருவர் என்னுடனே வண்டியிலேறி வருகிறார்கள். அவர்களில் ஒருவர் உந்துவண்டிகளை ஓட்டுவதில் மிக வல்லவர்; மற்றவரோ அஃதொன்றும் அறியாதவர். முன் கூறியதுபோல அவ்வண்டியில் ஒரு புதிய ஓசை தோன்றுகிறது. ஓட்டிக்கொண்டு போகும் நானே அதனை முதலாக உணர்கின்றேன். அதனை என்னிரண்டு நண்பர்களுக்குக்காட்டியபோது, வண்டியோட்ட அறிந்தவர் உடனே அவ்வோசையை உணர்ந்துகொண்டு, "அது யாதாயிருக்கலாம்" என என்னோடு ஆராய்கின்றார். மற்றொருவரோ அதனை உணரக்கூடவில்லை. மிக வருந்திச் சுட்டிக்காட்டியபோதும், உடனே எங்களுடைய பேச்சில் கலவாது தெருவிலிருக்கும் மரங்களையும் எதிரில் பறக்கும் பறவைகளையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். எங்கள் மூவருடைய உன்னிப்புநிலைகளும் அவ் வோசையைப் பொறுத்தவரையிலும் மூன்று வேறு வேறு நிலையில் இருக்கின்றன. வண்டியோட்ட அறியாதவருடைய உன்னிப்போ, ஒரிமைப்போதளவில் மறைந்துபோகின்றது. மற்றொரு நண்பரும் நானும், வண்டியிலெழும் பலவகை ஒலிகைகளையும் அவை பிறக்கும் வகைகளையும் வேறு பிரித்தறியப் பழகியிருக்கின்றோமாதலால் அதைப்பற்றி நீண்டபொழுதுவரை உன்னிப்பாக ஆராய்கின்றோம். நாங்களிருவரும் உந்துவண்டியில் அக்கரை காட்டுகின்றோம். எங்களிருவரிலும் எனக்கு அக்கரை அவ்வண்டியில் மிகுதியாக இருக்கின்றது. ஏன்? அவ்வண்டி என்னுடையதல்லவா?

எனவே, அக்கரை என்பது முயற்சிநிலையைப் பற்றியதேயாம். வேறு சிலர் அறிவுநிலையைப் பொறுத்ததென்பர். உந்துவண்டியில் ஏறிச்சென்ற மூவரில், அவ்வோசையை வேறு பிரித்தறியும் உணர்வு நிலை பெற்றிருந்த நாங்களிருவர்மட்டுமல்லவா அப்புதிய ஓசையை உணர்ந்து உன்னிப்பாக ஆராய்ந்தோம். ஆகவே அறிவுநிலையாலேயே அங்கே அக்கரை தோன்றுகின்றது என்பர். இஃது உண்மையல்ல. முதலிலே கூறின உயிர்களைப்போல, எந்த எந்தப் பொருள்கள் நமது இயற்கைச் செயனிலையைத்தூண்டுகின்றனவோ அந்த அந்தப் பொருள்களில்தான் நாம்நமது அக்கரையைக் காட்டுகிறோம். ஆனால் மக்களாகிய நாம் செயற்கைச் செயனிலைகளையும் வளர்த்துள்ளோம்; ஆகையாற்றான் புதிய புதிய அக்கரைகள் தோன்றுகின்றன. இவ்வளவே வேற்றுமை. நம்முடைய அறிவுநிலைசிறப்புற்றிருக்குமானால், இயற்கைச்செய்னிலை வழியாகஎழுந்த அக்கரை நீடித்திருக்கிறது. அது சிறப்புற்றிராவிட்டால் சிறிது பொழுதிலேயே மறைந்துவிடுகின்றது. எதிரே

கிடக்கும் பூவை ஒரு மரநூற் புலவரும் வேறொரு வழிப்போக்கனும் காண்கின்றனர். 'அது யாது' என அறிய அவர்கள் மனத்தே விருப்பம் எழுகிறது. இருவரும் அக்கரையோடும் உன்னிப்பாகப் பார்க்கின்றனர். 'ஏதோ ஓர் பூ' என அறிந்ததும் வழிப்போக்கனுடைய அக்கரை மறைகிறது. மேலே நடந்து செல்கின்றான். மரநூற் புலவரோ, "இந்த மரத்தின் இத்தகைய நிலையுள்ளது இப்பூ" என ஊன்றி நோக்கி உன்னிப்பாக அக்கரையோடும் ஆராய்கின்றார். பூவகையில் இந்தப் பிரிவைச் சேர்ந்தது இது என அவர் அப்போது அறியாமற்போனால், அவ்வாறு அவர் அறிந்து துணிகின்றவரையிலும் பல ஆண்டுகள் சென்றாலும் மறவாது நினைவில் வைத்து உன்னிப்போடும் ஆராய்வதில் அக்கரை காட்டுகின்றார். அக்கரையைத் தூண்டுவது செயனிலைதான். அதனை வளர்ப்பது அறிவு நிலையாகலாம். அக்கரையைப் பெற்ற தாய் இயற்கைச் செயனிலை; அதனை வளர்க்கும் செவிலித் தாயே அறிவுநிலை.

அக்கரையானது செயனிலையைப் பொறுத்ததேயன்றி அறிவுநிலையைப் பொறுத்ததன்றென்பதைவேறொரு எடுத்துக்காட்டுக் கொண்டு மக்டூகல் என்றபெரியார் விளக்கிவைத்திருக்கின்றார். செல்வனாகி வாழ எண்ணிய ஒருவர் இரும்புச் சரக்குகளை வாங்கி விற்று வருகிறார். இருப்புச் சரக்குகளைப்பற்றி யறியவேண்டியவற்றை எல்லாம் அறிகிறார். அவைகளைப்பற்றியே ஆண்டு முழுதும் பேசவேண்டுமானாலும் அவர்பேசிக் கொண்டே போவார். அவற்றிலேயே அக்கரையாக வாழ்கிறார். செல்வவானாகியதும் இவ்வேலையை விட்டுவிட்டுத் தம்முடைய ஊருக்குப் போய்த் தங்கிவிடுகிறார். அவருடைய பல துறைப்பட்ட இரும்பறிவு, அந்த நிலையிலே இருப்புச் சரக்குகளில் அக்கரையை உண்டுபண்ணுகிறதே இல்லை. இரும்பைப்பற்றி நினைப்பதையே மறந்துவிடுகிறார். ஆனால், இவர் தம்பொருளனைத்தும் ஈடுகாட்டிக் கடன் வாங்கித் தமது அண்டை வீட்டு நண்பருக்கு உதவிய பின்னர் ஒன்றுமற்ற அந்த நண்பர் திடீர் என இறப்பதால் கைப்பொருளனைத்தையும் இழந்து நடுத்தெருவில் நிற்கின்றார். மறுபடியும் இரும்புக்கடைச்செட்டியாராகவருகின்றார். இவ்வேலை செய்துதான் தீரவேண்டும் என்ற சட்டுப்பாடு எழுந்தபோது பழைய அக்கரையும் இரும்புச் சரக்குக்களில் தோன்றுகிறது. எனவே, இரும்பறிவு இருந்தபோதும் எழாத அக்கரை இச்செயனிலை எழுந்ததும் எழுகின்றதல்லவா.

ஒரு பொருளில் அக்கரையாக இருப்பதென்றால் என்ன? அதில் உன்னிப்பாக இருக்க முந்துவதேயாகும். அக்கரை என்பது மறைந்து நிற்கும் உன்னிப்பாகும்; உன்னிப்பென்பது செயல்வடிவுள்ள அக்கரையாகும். ஒரு பொருளிலோ உன்னிப்போ அக்கரையோ எழவேண்டுமானால் நம்முடைய மனமானது அப்பொருளை எண்ணக்கூடிய வகையிலோ இயல்பாகவோ பழக்கத்தாலோ அமைந்து கிடத்தல் வேண்டும்; அப்பொருளின் எண்ணம் நம்முடைய இயற்கைச் செயனிலையைத் தூண்டி வேட்கையைக் கிளப்பிவிடுவதோடு, அவ்வேட்கை வழியே அப்பொருளைக் குறித்து நமது முயற்சி தொடர்ந்து நிகழும்படியும் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

---

# அப்பர்

## அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்—30. வியாகரணம்

[729-வது பக்கத் தொடர்ச்சி]

II. சந்தமும் தமிழ்மாத்திரை அளவைகளும்.

மாத்திரையளவை விருத்தப்பாவியல் ஆசிரியர் நான்கு சூத்திரங்களில் தொகுத்துக் காட்டினார். அவையாவன:—

1. சீரியலி னலமைவ தீந்தமிழ் விருத்தம்
   ஆரிய மறைந்த வுயர்சந்த வபிதான
   வாரியது மாத்திரையி னலமையு மென்ப
   பாரிய லமைந்தபது மத்திரு வணங்கே.
2. குற்றியிர் தனக்கு மிருமாத்திரை குறித்தார்
   ஒற்றதை யடுத்துறையி னொன்றுதனி நிற்பின்
   மற்றவுயிர் மாத்திரை யிரண்டென வகுத்தார்
   ஒற்றதை யடுப்பினு முணர்ந்தறிய வல்லார்
3. நீண்டவுயி ரொற்றுடைய நீண்டில திரண்டும்
   நீண்டகுறி லேதனி நிகழ்ந்தகுறி லென்றே
   மாண்டவபி தானமவை வைத்தது பொருந்த
   வாண்டுவரு மீண்டுநனி யல்குமிடை மாதே.
4. அந்தத் துறைகுன் றியவக் கரமே
   சந்தத் தினினீ டுயிராஞ் சமமாய்
   வந்துற் றிடுசீர் கடையவ் வழியாஞ்
   செந்தா மரைசேர் திருவா னுதலே.

ஆரியச்சந்தமாகியவாரிதியைத் தமிழ்மாத்திரையால் அளக்கப் புகுவோம்.

தமிழில் மாத்திரை இலக்கணமாகப் பவணந்தி, எழுத்துக்களின் மாத்திரை கூறிய பின்னர் 'இயல் பெழுமாந்தர் இமைநொடி மாத்திரை" என்றார். பின்னர் மாத்திரைக்குப் புறனடையென.

"ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்
மேவும் இசைவிளி பண்டமாற் றாதியின்"

என்றனரன்றி, உயிரெழுத்துக்கள் அளவுகடந்து ஒலிப்பது இசையில் எவ்வாறென்பது காட்டியிருக்கக் கூடுமாயினும் அதை விட்டுவிட்டன ரென்பது வியக்கத்தக்கதன்று. நமது இலக்கியம் முற்றும், அவர் காலத்தில் செய்யுள்வடிவமாயிருந்ததும், செய்யுளென்பது இசைவடிவமே யென்பதும் இவர் நோக்கிலர் போலும். உயிரை, உயிரற்ற கற்றுண்டுகள்போல் இவர் கணக்கிடுவது இவர் கூறிய எழுத்துக்களின் மாத்திரைச் சூத்திரத்தால் விளங்கும்:—

"மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையௌக் குறுக்க மொற்றளபு
அரையொற் றிஉக் குறுக்க மாய்தம்
கால்குறள் மஃகா னய்தம் மாத்திரை"

என்னும் சூத்திரப்படி நாம் ஒரு அசையில் எழுத்துக்களின் சையோகத்தில் மாத்திரை அளவு கூட்டுதல் கணிதசாஸ்திர விதிக்கு ஒவ்வாது. உயிரும் உடம்பும் ஒன்றுங்காலை, உயிர்மெய்க்கு உயிர் மாத்திரையே மாத்திரையாய் நிற்பது போல், உயிரைப் பின்பற்றி வரும் மெய்யானது, உயிரளவையை நீட்டுவதும் உண்டு, அல்லது அத்துடன் சேர்வதால் தன் மாத்திரை முற்றும் அழிவதும் உண்டு என்பது சந்தவிருத்தத்தில் முக்கியமாய் அறியவேண்டிய விஷயமாம். த்+ஆ என்பது மாத்திரையில் $\frac{1}{2}+2$ ஆக $2\frac{1}{2}$ ஆகாமல் இரண்டுமாத்திரை யாவதுபோல, தாம் என்னும் அசையிலும் தா+ம் என்பது $2+\frac{1}{2}$ அல்லது $2\frac{1}{2}$ ஆகாமல் இரண்டு மாத்திரை யளவேயாம். ஆயினும் "தம்" என்னும் அசை $1+\frac{1}{2}$ ஆக $1\frac{1}{2}$ ஆகாமல் இரண்டாக நீளும். 'த' போன்ற குறில் தனியே நின்றாலன்றி, அதைக் குறிலென்று சந்தத்தில் எண்ணலாகாது என்னும் உண்மையை விருத்தாப்பாவியல் ஆசிரியர், "குற்றுயிர் தனக்கும் இருமாத்திரை குறித்தார், ஒற்றதை யடுத்துறையின் ஒன்று தனி நிற்பின்" என்றார். ஆகையால் அவர் - 3ம் சூத்திரத்தில் விவரித்த வண்ணம் நெடிலும் (நீண்டவுயிர்) ஒற்றுடைய குறிலும் (நீண்டிலது) இரண்டும் நெட்டெழுத்தாகவே சந்தவிருத்தங்களில் நாம் கணக்கெடுக்கவேண்டும். தனிக்குறிலாய் நிற்பதையே குறிலெனவெடுத்து ஒரு மாத்திரை அளவெனக் கொள்ளல் வேண்டும். இக்குறிலும் ஒருசீர் முடிவில் வரவேண்டிய அளவு குன்றி நிற்குமாயின் நெடிலாகும். (உ - ம்)

"அங்கிங்கெ னாதபடி யெங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தியா கி"

என்னும் பாசுரத்தில் "கி"யாகிய குறிலை நெடிலாகவுரைக்க.

இசையாவது அளவு தவறாது நிற்றல். ஆகையால் மேற்கூறிய அளவையால் அலகிட்டாலன்றிச் சந்தவிசை விளங்காது. பண்ணுந் தாளமும் பொருந்தினாலன்றிச் செய்யுள் மாட்சிமைபெறாது. ஆதலால் இனி விவரிக்கப்படும் சந்த விருத்தங்களின் இலக்கணம் கூறுமிடத்து விருத்தாப்பாவியல் கூறும் இப் பொதுவிதிகளைக் கவனிக்கவும்.

சந்தவிருத்தங்கள் யாவும் ஆரியத்திலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளென்று எண்ணலாகாது. பல்வகைச் சந்தங்களை நமது சமயகுரவரே உற்பத்திசெய்தனர். அவர் முத்தமிழிலும் இலக்கணங் கண்டவர்களாதலால் அவ்வாறு அவர் செய்ய நேர்ந்தது. ஆயினும் அவரைப் பார்த்து நாமும் ஏன் உண்டாக்கலாகாதென்பது பயனற்ற கேள்வியே யாம். திருஞானசம்பந்தரைப்போல் "யாழ் முரி" பாடக் கூடுமாயின் அவ்வாறு நாமும் செய்யலாம். தமிழ்ப்பண்கள் பழயன பலவுள. அவற்றைப் போன்றனவும், ஆரியத்திலிருந்து எடுக்கப்பட்டன சிலவுள (உ-ம்) தக்கராகம், பழந் தக்கராகம். இவற்றில் இரண்டாவது சுத்தத் தமிழ்ப்பண், முன்னது ஆரியத்தைத் தழுவியது. இவற்றைப் பின்னர் ஆங்காங்குக் காண்போம்.

---

# கலித்தொகை

[736-வது பக்கத் தொடர்ச்சி]

### பாலைக்கலி 30.

இளவேனிற்காலத்தில் வந்துவிடுவதாகத் தலைவன் தலைவிக்குக் கூறி மண்ணாசையால் பிரிந்தான். முன்பனிக்காலமும் பின்பனிக் காலமும் வந்து வருத்த ஆற்றாத தலைவியைத் தோழி ஆற்றியிருக்குமாறு வற்புறுத்த, அதற்குமாறாக வருந்தின தலைவிக்கு அவள் தலைவனது வரவுணர்ந்து பேருவகையால் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

---

கடும்புனல் கால்பட்டுக் கலுழ்தேறிக் கவின்பெற
நெடுங்கயத் தயலய லயிர்தோன்ற வம்மணல்
வடுத்தூர வரிப்பபோ லீங்கைவா டுதிர்புகப்
பிரிந்தவர் நுதல்போலப் பீர்வீயக் காதலர்ப்
புணர்ந்தவர் முகம்போலப் பொய்கைபூப் புதிதீன
மெய்கூர்ந்த பனிபொடு மேனின்ற வாடையாற்
கையாறு கடைகூட்டக் கலக்குறாஉம் பொழுதுமற்
பொய்யேமென் றாயிழாய் புணர்ந்தவ ருரைத்ததை

மபங்கமர் மாறட்டு மண்வௌவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேற் றகைகாண விடுவதோ
பயங்கெழு பல்கதிர் பால்போலும் பொழுதொடு
வயங்கிழை தண்ணென வந்தவிவ் வசைவாடை

தாள்வலம் படவென்று தகைநன்மா மேல்கொண்டு
வாள்வென்று வருபவர் வனப்பார விடுவதோ
நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு
தோளதிர் பகஞ்சேரத் துவற்றுமிச் சின்மழை

பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மனும் வனப்பார விடுவதோ
புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா
முகைவெண்ப னுதிபொர முற்றிய கடும்பனி

எனவாங்கு

வாளாதி வயங்கிழாய் வருந்துவ ளிவளென
நாள்வரை நிறுத்துத்தாஞ் சொல்லிய பொய்யன்றி
மீளிவேற் றானையர் புகுதந்தார்
நீளுயர் கூட னெடுங்கொடி யெழவே.

(தரவு)

(வரி. 1-8) கடும் புனல் கால்பட்டு - மிக்க நீர் கால்வாய்களில் பொருந்தி, கலுழ் தேறி - கலக்கம் நீங்கி, கவின் பெற - அழகைப் பெறவும், நெடுங்கயத்து அயல் அயல் - நீண்ட குளங்களின் பக்கங்களில் எல்லாம், அயிர் தோன்ற - நுண்மணல் காணப்படவும், அ மணல் வடு தூர - அந்த மணலிலுள்ள அடையாளங்கள் மறையும்படி, வரிப்பபோல் - அழகைச் செய்வனபோல, ஈங்கை வாடு உதிர்பு உக - ஈங்கைக் கொடியினுடைய வாடுதலைக்கொண்ட பூக்கள் உதிர்ந்து சிந்தவும், பிரிந்தவர் - (கணவரைப்) பிரிந்த பெண்களினுடைய, நுதல்போல - நெற்றியைப் போல, பீர் வீய-(முன்பு பூத்த) பீர்க்கம் பூ (இப்பொழுது) இல்லாமற் போகவும், காதலர் புணர்ந்தவர் முகம்போல-தாம் அன்புகொண்ட தலைவரைக் கூடின பெண்களின் முகத்தைப்போல, பொய்கை பூ புதிது ஈன - குளமானது தாமரைப் பூவைப் புதிதாகப் பூக்கவும், பொழுது -(முன்பனிக் காலத்திற்கும் பின்பனிக் காலத்திற்கும் பின் வரும்) இளவேனிற் காலம், ஆயிழாய் - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த தோழியே, பொய்யேம் என்று - பொய் சொல்லமாட்டோம் (தப்பாமல் வருவோம்) என்று சொல்லி, புணர்ந்தவர் உரைத்ததை - நம்மைக் கூடிய தலைவர் உரைத்த காலமாம், மன் - அதனால் நாம் பெற்ற

தென்? மெய் கூர்ந்த - (அக்காலம் வருமளவும் ஆற்றி இராதபடி) உடம்பு வளைதற்குக் காரணமாகிய, பனியொடு - பின்பனியாலும், மேல்நின்ற வாடையால் - அதற்கு முன்னுள்ள முன்பனிக் காலத்து வாடையாலும் (உண்டாகிய), கையாறு கடை கூட்ட-செயலற்று நிற்கும் நிலைமை இறப்பை நமக்குக் கூட்டுதலினால், கலக்குறூஉம் - (மனம்) கலக்க முறுகின்றது!

(தாழிசை)

(வரி 9 - 12) பயம் கெழு - பல்பொருளும் பல்லுயிரும் தோன்றுதலாகிய பயனோடு கூடிய, பல்கதிர் - (சந்திரனது) பல கிரணங்கள், பால் போலும் பொழுதொடு - பாலைப் போல விளங்கும் இராப்பொழுதோடு, வயங்கு இழை - விளங்குகின்ற ஆபரணங்கள், தண் என வந்த இ அசை வாடை - குளிரும்படி வந்த இந்த அசைகின்ற வாடைக் காற்றானது, மயங்கு அமர் - இரண்டு சேனைகளும் கலந்து செய்கின்ற போரில், மாறு அட்டு - மாறுபட்ட அரசனைக் கொன்று, மண் வௌவி-(அவன்) நாட்டைக் கைக்கொண்டு, தயங்கிய களிற்றின் மேல் - விளங்கிய யானையின் மேல், வருபவர் - வருந் தலைவரது, தகை காண - (வீரத்தால் தோன்றிய) அழகைக் காண, விடுவதோ - (நம்மை உயிருடன்) விடுமோ ?

அசை வாடை விடுவதோ என முடிக்க, மாறு - ஆகு பெயர்.

(வரி. 13 - 16) நீள் கழை நிவந்த பூ - நீண்ட கரும்பில் வளர்ந்த பூவினது, நிறம் வாட - நிறம் வாடும்படி, தூற்றுபு - காற்றால் தூற்றி, தோள் அதிர்பு - தோள்கள் நடுங்கி, அகம் சேர-நம் மார்பைச் சேரும்படி, துவற்றும் - தூறுகின்ற, இ சில் மழை - இச்சிறு மழை, தாள் - (தமது) முயற்சியால், வலம்பட வென்று - வெற்றி உண்டாகும்படி வென்றும், தகை நல் மா மேல் கொண்டு - இலக்கணம்பொருந்தியநல்ல குதிரையின்மேல்அமர்ந்து, வாள் வென்று - வாளாலே வென்றும், வருபவர் வனப்பு ஆர-வரும் தலைவரின் (வீரத்தால் பிறந்த) அழகை நாம் கண்டு அனுபவிக்கும்படி, விடுவதோ - (நம்மை உயிருடன்) விடுமோ ?

சின்மழை........விடுவதோ, என முடிக்க.

(வரி. 17 - 20) புகை என - புகையைப் போல, புதல் சூழ்ந்து - புதர்களைச் சுற்றிக்கொண்டு, பூ அம் கள் - (மலர்ந்த) பூக்களில் உள்ள அழகிய தேனை, பொதி செய்யா - உள்ளே கொள்ளுதல் செய்யாத, முகை - முல்லை அரும்புகள் போன்ற, வெண்பல் நுதி பொர - வெண்மையான பற்களின் முனைகள் ஒன்றோடொன்று தாக்கும்படி, முற்றிய கடும்பனி - முதிர்ந்த கடுமையாகிய பனி, பகை வென்று - பகை யரசரை வென்று, திறை கொண்ட - (அவர்களிடமிருந்து) கப்பம் வாங்கின, பாய் திண் தேர் மிசையவர் - பாய்கின்ற திண்ணிய தேர்மேல் வருபவரது, வகை கொண்ட செம்மல் வனப்பு - பல விதக் கூறுபாட்டைக் கொண்ட தலைமையினையுடைய வீரத்தாற் பிறந்த அழகை, நாம் ஆர-நாம் கண்டு அனுபவிக்கும்படி, விடுவதோ - நம்மை உயிருடன் விடுமோ!

கடும்பனி........விடுவதோ, என முடிக்க.

(தனிச்சொல்)

என - என்று, ஆங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி. 22 - 25) வயங்கு இழாய் - விளங்குகின்ற ஆபரணங்களை உடைய தலைவியே, வாளாதி-பேசாதே! இவள் வருந்துவள் என - தலைவி வருந்துவாள் என்று, நாள் வரை நிறுத்து தாம் சொல்லிய - தாம் வரும் நாளின் எல்லையைக் குறிப்பிட்டுச் சொல்லிய உறுதிமொழிகள், பொய் அன்றி - பொய் ஆகாதவாறு, நீள் உயர் கூடல் - மிக உயர்ந்த (மதில்களையுடைய) மதுரையில், நெடுங்கொடிஎழு-நீண்ட கொடிகள் உயரும்படி, மீளி வேல் தானையர் - இயமனையொத்த வேல்கொண்ட சேனையையுடைய தலைவர், புகுதந்தார் - நுழைந்தார்.

வாளா என்கிளவி பேசா என்றாகும் (திவாகரம்)

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

5-ம் பத்து, 10-ம் தசகம்

[731-வது பக்கத் தொடர்ச்சி]

9-ம் பாசுரம்.

அடியை மூன்றை யிரந்தவா றமங்கே
நின்றாழ் கடலு மண்ணு விண்ணும்
முடிய வீரடியான் முடித்துக்
கொண்ட முக்கியமும்
நொடியு மாறவை கேட்குந் தோறுமென்
னெஞ்ச நின்றனக்கே கரைந்துருகும்
கொடிய வல்வினையே னுன்னை
யென்றுகொல் கூடுவதே.

அவதாரிகை:—இரண்டாம் பாசுரத்தில் துவக்கிய பகவானின் கலவியை இன்னமும் வேட்கை மிகுதியால் திரும்பி அபேக்ஷிக்கின்றார். அது பகவானிடத்தில் செய்யும் விண்ணப்பம்.

உரை:—அடி மூன்றை இரந்தவாறும் - மூன்று லோக ஆதிபத்தியத்தையும் பலிச்சக்கரவர்த்தி இந்திரனிடத்தினின்றும் கவர்ந்துகொள்ள அவற்றை இந்திரனுக்கு மீட்டுக்கொடுக்கும் நிமித்தம் பலிசக்கரவர்த்தியிடத்தில் மூன்று அடி யாசித்தபடியும், அங்கு-அந்த அவசரத்தில், ஆழ்கடலும்-ஆழமான சமுத்திரத்தையும், மண்ணும் விண்ணும் முடிய-லோகங்களெல்லாவற்றையும், ஈரடியால் முடித்துக்கொண்ட முக்கியமும் - இரண்டு அடியாலே அளந்து கவர்ந்துகொண்ட சாமர்த்தியமும், நொடியும் ஆறு அவை - புராணங்கள் கூறுகின்றபடி அந்தச் சரித்திரங்களை, கேட்குந்தோறும் - கேட்குந்தோறும், என்நெஞ்சம், நின்றனக்கே - உன்மாட்டே, கரைந்து உருகும் - நெகிழ்ந்து கரையும், கொடிய வல் வினையேன்-உன்னிடத்திலிருந்து மனதை அடக்கி என் வசமாக்கச் சக்தியில்லாத பாப வினைகளை இயற்றியிருக்கின்ற யான் (ஏலாத மன நிகழ்ச்சியைப் பூர்ணமாக்க யத்நிப்பதை விட்டுவிடலாகாதோ அது ஒழிந்தால் கவலையற்றிருக்கலாமே என்கிற கேள்விக்கு ஆழ்வார் பதில்அளிக்கின்றார் - பகவானிடத்தில் ஆசையை ஸம்பூர்ணம் தன் மனோரதம்போல் அநுபவிக்கமாட்டுவதும் இல்லை - அதை ஒழித்துவிடவும் ஏலவில்லையே என்று வியஸநம். (இது எப்போது நிறைவேறுமென்றால் மேல் அருளிச்செய்கிறார்) "உன்னை யென்றுகொல் கூடுவதே"—உன்னைக் கூடிவிட்டால் பிறகு வேட்கை அடங்கும்-அது எப்போது நேருமென்று எதிர்பார்க்கின்றேன். அடுத்த பாசுரத்தில், இது நேர வெகுகாலமாகுமாகையால் தற்காலம் மனதால் பூர்ணமாய்த் தெளிந்து மேல்கண்ட ஸம்பவங்களை அநுபவித்தால் போதுமென்று அருளிச்செய்கிறார்.

இப்பொருள் அப்பாசுரத்தில், "நின்தன்னை நாடும் வண்ணம் சொல்லாய்" அதாவது "உன் திவ்விய சரித்திரங்களையும் சேஷ்டிதங்களையும் தேடி அவை நிரந்தரம்சித்திக்கும்வண்ணத்தை அருள்செய்யவேணும்"—என்பதால் விளங்கும்.



---

10-ம் பாசுரம்.

கூடி நீரைக் கடைந்த வாறு மமுதந்
தேவ ருண்ண வசுரரை
வீடும் வண்ணங்களே செய்து
போன வித்தகமும்
ஊடு புக்கென தாவியை யுருக்கி
யுண்டிடு கின்ற நின்றன்னை
நாடும் வண்ணம் சொல்லாய்
நச்சு நாகணை யானே

கூடி - அசுரரும் தேவர்களும் ஒன்று சேர்ந்து', நீரை கடைந்தவாறும்-பால் சமுத்திரத்தை அமிர்தத்துக்காகக் கடைந்தபடியும் (மந்திர பர்வதத்தை மத்தாகவும் வாசுகியைக் கயிறாகவும் பகவான் அமைத்துச் செய்த மற்ற எல்லா உபாயமும் "கடைந்தபடி"யில் அந்தர்கதம்).அமுதம் தேவருண்ண - திரண்ட அமிர்தத்தைத் தேவர்கள் குடிக்க, அசுரரை வீடும்வண்ணங்களே செய்துபோன வித்தகமும் - அசுரர்கள் அமிர்தத்தை அபேக்ஷியாமல் விட்டகலச் செய்த பிரகாரமான ஆச்சரியமும், (இங்கு,மோஹனாவதாரம் எடுத்துப் பகவான் செல்லவே அவனையே தொடர்ந்து காமங்கொண்டு அசுரர்கள் பின்போய் அமிர்த பாத்திரத்தை இழந்த கதையை நினைத்தருளியபடி) என தாவியை ஊடுபுக்கு-என் ஆத்மாவின்மர்மத்திலே சென்று தைத்து, உருக்கி உண்டு இடுகின்ற, நின் தன்னை - இவ்வண்ணம் ஆச்சரிய சக்தியுள்ள உன்னை, நாடும் வண்ணம், சொல்லாய் - என் மனது கலங்காமல் பூர்ணமாய் நின்று அநுபவிக்கும்படி ஒரு விரகு பார்த்தருளவேணும். நச்சுநாகணையானே - ஆச்ரிதர்களின் விரோதிகளைப் போக்கும் ஸ்பாவமுடைய ஆதிசேஷன்மேல் பள்ளிகொண்ட நாராயணனே.

குறிப்பு:—இங்கு ஆதிசேஷனை எடுத்தது ஆச்ரிதரைத் தன் பக்கல் பகவான் அணைத்துக்கொள்வான் என்று காட்டுதல் நிமித்தம்.

---

11-ம் பாசுரம்.

நாக ணைமிசை நம்பிரான் சரணே
சரண்நமக் கென்று நாடொறும்
ஏக சிந்தையனாய்க் குருகூர்ச்
சடகோபன் மாறன்
ஆகநூற்றவந்தாதி யாயிரத்து
ளிவையுமோர் பத்தும் வல்லார்
மாக வைகுந்தத்து
மகிழ்வெய்துவர் வைகலுமே.

பதக் குறிப்புக்கள்:—மாகம்-மா-மஹத்தான, கம்-ஆகாசம், மாறன் ஆக - உளனாயிருக்கும்படி-தமக்கு பகவத் குணம், பிறர்க்கு அன்னம்போல் தாரகம் என்று திருவுள்ளம், வைகலும் - நிச்சலும்-எல்லாக் காலத்திலும், நூற்ற - பண்ணின - பாக்களாகவமைத்த, ஓர்-ஒரே இலக்ஷியத்தில் சிந்தை வைத்து ஏற்படுத்திய அதிசயமான நூல்.

பொழிப்புரை:-சரணம் புக்காரைத் திருவனந்தாழ்வான்மேல் பள்ளிகிடக்கும் ஆச்ரிதர் விஷயத்தில் உபகாரகனாயிருந்துள்ள வெம்பெருமானுடைய திருவடிகளை நமக்குச் சரணென்று நாள்தோறும் ஒரே அபிப்பிராயமான நேசமுள்ள மனோரதமுள்ள ஆழ்வார் தாமுளராகுகைக்காக அவனது குணங்கள் தூண்டப் பாட்டாய்ச் சொன்ன இவ்வாயிரத்தில் இப்பத்தும் கற்றார் ஸ்ரீ வைகுண்டத்தில்எம்பெருமானை நித்தியம் அநுபவிப்பார்கள்.

ஆச்ரிதர்கள் பகவானின் குணத்திலும் வடிவழகிலும் ஊன்றிநின்று மனதில் சஞ்சலமில்லாமல் அநுபவிக்க வேண்டுமானால் அவனையே சரணமாகப் பற்ற வேண்டுமென்று இப்பத்தில் ஆழ்வார் கற்பிக்கின்றார்.

# யாப்பிலக்கணம்

[526-வது பக்கத் தொடர்ச்சி]

இதுகாறும் கலாநிலயத்தின் இதழ்களில் வெளிவந்த யாப்பிலக்கணப் பகுதிகளில் கற்ற செய்யுட்களுக்குச் சிறப்பின் அமைந்த சில கருத்துகள் உள. அவற்றைக் கவனிப்போம்:

கூன்

கூன்:—செய்யுளின் அடி முதலில், செய்யுளின் பொருளைத் தழுவித் தனியே நிற்குஞ் சொல்லும் உண்டு. அதை யாப்பிலக்கணம் வல்லார் கூன் என வழங்குவர். அக்கூன் சிறுபான்மை வஞ்சிப்பாவின் ஈற்றிலும், வஞ்சிப்பாவின் இடையிலும் அமைந்து வருதலும் உண்டு. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா என்னும் பாக்களில் இடையிலும்இறுதியிலும் கூன் அமையாது. கூனைத் தனிச்சொல் என்று வழங்குவாரும் உளர். அங்ஙனம் வழங்குதல் சில ஆசிரியர்க்கு உடன்பாடன்று. ஏனெனில், நேரிசை வெண்பாவின் இரண்டாமடியின் ஈற்றிலும், இன்னிசை வெண்பாக்களில் எவ்வடியிலேனும் ஈற்றிலும் அமைந்து வருஞ் சொல்லைத் தனிச்சொல் என்றே வழங்குவது இதற்குச் சான்றாகும்.

வரலாறு:

"உதுக்காண்,
சுரந்தானா வண்கைச் சுவானமாப் பூதன்
பரந்தானாப் பல்புகழைப் பாடி—இரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னு மளிதேர் மழை."

(இந்நேரிசை வெண்பாவில் முதலடியில் 'உதுக்காண்' எனக் கூன் அமைந்துள்ளமை காண்க.)

"அவரே,
கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே;
"யானே,
தோடா ரெல்வளை நெகிழ ஏங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே:
அன்னள் அளியள் என்னாது மாமழை

இன்னம் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் இன்னுயிர் குறித்தே.''

(குறுந்தொகைச் செய்யுளாகிய இந்நேரிசை யாசிரியப் பாவில் அடி முதலில் **அவரே, யானே** எனக்கூன் அமைந்துள்ளமை காண்க.)

''உலகினுள்,
பெருந்தகையார் பெருந்தகைமை
பிறழாவே பிறழினும்
இருந்தகைய இறுவரைமேல்
எரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை
சிறப்பெனினும் பிறழ்வின்றி
உறுதகைமை உலகினுக்கோர்
ஒப்பாகித் தோன்றுவே.''

(பெரியோர் சிறியோர் இயல்புகளை இனிது விளக்கும் இத் தாவு கொச்சகக் கலிப்பாவுள் அடி முதலில் 'உலகினுள்' எனக் கூன் அமைந்துள்ளமை காண்க.)

'' உலகே,
முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி ஒழுகுமென்ப
அதனால்,
நற்றிற நாடுதல் நன்மை
பற்றற யாவையும் பரிவறத் துறந்தே.''

(பற்றறுத்தலின் நன்மையை இனிதுணர்த்தும் இவ் வஞ்சிப்பாவில் அடிமுதலில் 'உலகே' எனக் கூன் அமைந்தமை காண்க. இப்பாவில் இடையிலமைந்துள்ள 'அதனால்' என்பது தனிச்சொல் எனவே வழங்கப்படுமென் பதையறிக.)

(a) 'மாவழங்கலின் மயக்குற்றன வழி.'
(b) 'கலங்கழாலித் துறைக் கலக்குற்றன.'
(c) 'தேரோடத் துகள்கெழுமின தெருவு.'

(வஞ்சிப் பாக்களின் அடிகளாகிய இவற்றில் இடையி லும் இறுதியிலும் அசையும் சீரும் கூன் ஆயினமை காண்க.)

விகாரம்

செய்யுட்களில் அடி தொடை நோக்கம்பற்றி அமைந்து வரும் விகாரங்களைக் கற்போம்:

செய்யுள் விகாரம் ஒன்பது வகைப்படும். அவை வலித்தல் விகாரம், மெலித்தல் விகாரம், விரித்தல் விகாரம், தொகுத்தல் விகாரம், நீட்டல் விகாரம், குறுக்கல் விகாரம், முதற்குறை விகாரம், இடைக்குறை விகாரம், கடைக்குறை விகாரம் என வழங்கப்படும். இவற்றுள் முன்னைய ஆறும் பகுபதங்களிலும், பின்னைய மூன்றும் பகாப்பதங்களிலும் வழங்குமென அறிக. இவ்விகாரங்கள் செய்யுட்கே அமைந்தனவாதலால், உரை நடையில் இவை பயின்றுவரல் சிறப்பன்றெனக் கொள்க.

1. இவற்றுள் வலித்தல் விகாரமாவது ஒரு சொல்லிலுள்ள மெல்லின மெய்யெழுத்து வல்லின மெய்யெழுத்தாக விகாரப்படுதலாம்.

உ-ம்:—''குறுத்தாட் பூதஞ் சுமந்த
அறக்கதிராழியெம் மண்ணலைத்தொழினே.''

(இவ்வடிகள் ஒரு நேரிசை யாசிரியப்பாவின் ஈற்றிலுள்ள இரண்டடிகளாகும். இவற்றுள் ஈற்றடியின் முதற்சீர் 'அறக்கதிர்' என அமைந்திருப்பதால், எதுகையின்பம் நோக்கி முன்னடியிலுள்ள முதற்சீர் 'குறுந்தாள்' என்றிருக்க வேண்டுவது 'குறுத்தாள்' என விகாரப்பட்டது.)

2. மெலித்தல் விகாரமாவது ஒரு சொல்லிலுள்ள வல்லின மெய்யெழுத்து மெல்லின மெய்யெழுத்தாக விகாரப்படுதலாம்.

உ-ம்:—''தண்டையின் இனக்கிளி கடிவோள்
பண்டையள் அல்லள் மானோக் கினளே''

(நேரிசையாசிரியப்பாவின் ஈற்றடிகளாகிய இவ்விரண்டடிகளுள் முன்னடியிலுள்ள முதற்சீர் 'தட்டையின்'என்றிருக்க வேண்டுவது, எதுகையின்பங் கருதி, 'தண்டையின்' என விகாரப்பட்டமை யறிக.)

3. விரித்தல் விகாரமாவது ஒரு சொல்லில் மெய்யெழுத்தும் உயிர்மெய்யெழுத்தும் இல்லாத இடத்தில் செய்யுளின்பங் கருதி அவற்றுள் ஒன்றை அமைத்துக்கொள்ளுதலாம்.

உ-ம்:—''ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.''

(இவ் வெற்றிவேற்கைச் செய்யுளில் 'வீழ்க்குமே'என்றிருக்க வேண்டிய சொல்லில் சீர் சிதையாமை கருதி 'வீழ்க்கும்மே' என மகர மெய் விரிந்தமை காண்க.)

4. தொகுத்தல் விகாரமாவது செய்யுளின்பங்கருதி ஒரு சொல்லிலுள்ள ஒரெழுத்தைத் தொகுத்தமைப்பதாம்.

உ-ம்:—''சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே''

(ஆசிரியப்பாவின் ஓரடியாகிய இதில் 'சிறியவிலை' என அமைய வேண்டிய தொடர் 'சிறியிலை' எனத் தொக்கு நிற்றலறிக.)

5. நீட்டல் விகாரமாவது செய்யுளின்பங் கருதிக் குற்றெழுத்து நெட்டெழுத்தாக விகாரப்படுதலாம்.

உ-ம்:—

''ஆர்த்த அறிவினர் ஆண்டிளைய ராயினும்
காத்தோம்பித் தம்மை அடக்குப:மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோல்
போத்தறார் புல்லறிவி னார்.''

(இந்நாலடியார் செய்யுளில், ஈற்றடியில் உள்ள 'போத்தறார்' என்னும் சொற்றொடர் 'பொத்தறார்' என்றிருத்தற்குரியதாம். பொத்து—அறிவின்மை எனப் பொருள் படும். அஃது அடிமோனையின் பொருட்டு 'போத்தறார்' என விகாரப்பட்டது.)

6. குறுக்கல் விகாரமாவது ஒரு சொல்லிலுள்ள நெட்டெழுத்துக் குற்றெழுத்தாக விகாரப்படுதலாம்.

உ-ம்:—

''பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றா ரிருவ ரவருள்ளும் [டைக்
பொன்னோடை நன்றென்றா ளல்லளே;பொன்னோ
கியானைநன் றென்றாளு மந்நிலையள்; யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்.''

(இப் பலவிகற்பப் பஃறொடை வெண்பாவின் இறுதிச் சீரை நோக்குக. அது 'தீயேன்' என இருக்க வேண்டுவது சீரும் தளையும் சிதையாமைப் பொருட்டு 'தியேன்' எனக் குறுக்கல் விகாரம் அடைந்தது அறிக.)

7. முதற்குறை விகாரமாவது பகாப்பதத்தின் முதல் குறைந்து வழங்கப்படுதலாம்.

உ-ம்:—''மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி.''



(இதில் 'தாமரை' என்னும் சொல் முதல்குறைந்து 'மரை' என நின்றது.)

8. இடைக்குறை விகாரமாவது பகாப்பதத்தின் இடை குறைந்து வழங்கப்படுதலாம்.

உ-ம்:—வேதின வெரிநின் ஓதி முதுபோத்து.''

(இதில் 'ஓந்தி' என இருத்தற்குரிய சொல் 'ஓதி' என இடை குறைந்து நின்றது.)

9. கடைக்குறை விகாரமாவது பகாப்பதத்தின் கடை குறைந்து வழங்கப்படுதலாம்.

உ-ம்:—''நீலுண் துகிலிகை கடுப்ப.''

(இச்செய்யுளடியில் 'நீலம்' என்றிருக்க வேண்டிய சொல், லகரத்திலுள்ள அகரவுயிரும் ஈற்றிலுள்ள மகர மெய்யுங் குறைந்து நிற்றலறிக.)

குறிப்பு:—இங்ஙனம் சொற்களை விகாரப்படுத்தி வழங்கும்போது நாம் முன்னோர் மரபைப் பின்பற்ற வேண்டும். நாமே நினைத்தவாறு விகாரப்படுத்தி வழங்கினால், இலக்கண மரபு கெட்டு இடர்ப்பட நேரிடும் என்பதை யறிதல் வேண்டும்.

# காற்று மழை

189165

## Shakespeare—"The Tempest"

அங்கம் 5. களம் 1.

[732-வது பக்கத் தொடர்ச்சி]

அலான்ஸோ :—அன்னவன்தானோ நீ அல்லனோ, அல்லது, இன்றிதுகாறும் செய்ததுபோல் என்னை வஞ்சிக்க வந்ததொரு மந்திரசாலத் தோற்றமோ யான் அறிகிலேன் (1). ஊனும் உதிரமும் போல் உன் நாடி துடிக்கின்றது (2). நின்னைப் பார்த்ததிலிருந்து, என்னைப் பற்றிக்கொண்டிருந்த பித்தம் நீங்கி என் மனம் தெளிவடைகின்றது. இதுதான் இருப்பதேயாயின், விந்தைமிகுந்த கதையொன்று வேண்டுதல் வேண்டும் (3). நின் அரசினை நான் விட்டுவிடுகின்றேன்;நானுனக்கிழைத்த பிழைகளைப் பொறுக்குமாறும் வேண்டுகின்றேன் — மற்று, ப்ராஸ்ப்பீரோ உயிரோடிருப்பதும், இவ்விடத்திலிருப்பதும் எங்ஙனம் கூடும்?

ப்ராஸ்ப்பீரோ:—முதலில், பெருந்தகை நண்ப, அளப்பதற்கும் அடைப்பதற்கும் இயலாத பெருமை வாய்ந்த நின் முதுமையை யான் தழுவிக்கொள்வேன் (4).

கன்ஸாலோ:—இது இருப்பதேயோ அல்லதோ, ஆணையிடேன். (5).

ப்ராஸ்ப்பீரோ:—நிச்சயமென்று ஒன்றையும் நீங்கள் நம்பாவண்ணம் இத்தீவின் நுட்பங்கள் சிலவற்றை இன்னும் சுவைக்கின்றீர் (6)—என் நண்பர்காள், எல்லீரும் இனிது வருக—[ஸபஸ்டியனுக்கும் அன்டோனியோவிற்கும் ஒரு புறமாய்] மற்று, நீங்களோ, என் இரட்டைப் பிரபுக்களே, எனக்கு மனமுண்டாயின், வேந்தன்றன் வெகுளிச் சுளிப்பை உங்கள்மீது பறித்து, உங்களைத் துரோகிகளென்னக் காட்டித்தருவேன்? எனினும், இவ்வேளை கதைகளொன்றுங் கழறேன் யான் (7).

ஸபஸ்ட்டியன்:—[ஒரு புறமாய்] பேய்தானே இவனிற் பேசுகின்றது (8).

ப்ராஸ்ப்பீரோ:—இல்லை (9); நின்னையோ, கயமையிற் கொடிய ஐய,—தம்பியென்று அழைப்பதும் என் வாயை நோய் செய்யும்,—கொடிதினுங்கொடிய உன் குற்றத்தை யான் மன்னித்து விடுகின்றேன்—எல்லாவற்றையும்—என் அரசினை மீண்டும் நின்வயின் கேட்கின்றேன்; அதனை நீ திருப்பித்தந்துதான் தீரவேண்டுமென்பதும் அறிவேன்.

அலான்ஸோ:—நீ ப்ராஸ்ப்பீரோ ஆவாயாயின், இதுகாறும் நீ அழியாமல் இருக்கவந்த வரலாற்றை

(1) பண்டைய ப்ராஸ்ப்பீரோவே தான் என்று தெரிவித்துக்கொண்டவனுக்கு அலான்ஸோ கூறுகின்ற பதில் இது.

(2) ப்ராஸ்ப்பீரோ தன்னைத் தழுவிக்கொண்டபோது நாடியின் துடிப்பை அலான்ஸோ உணர்ந்திருப்பானதலின், ''ஊனும் உதிரமும் உடைய ஒரு மனிதன் என்றே உன்னை எண்ணுகின்றேன். நீ வெறும் மாயத் தோற்றமாயிருக்க இயலாது''—என்கின்றான்.

(3) இதுதான் இருப்பதேயாயின் - இப்பொழுது நிகழ்ந்தனவெல்லாம் வெறும் கனவாக அல்லாமல் உண்மை நிகழ்ச்சிகள் ஆகுமாயின்—என்பது பொருள்.

விந்தை...வேண்டும் -இந்நிகழ்ச்சிகளில் வரலாற்றைச் சொன்னால், அது மிகவும் ஆச்சரியமான ஒரு கதை ஆக வேண்டும்—என்பது பொருள்.

(4)......என்று கூறிக் கன்ஸாலோவை ப்ராஸ்ப்பீரோ அன்புடன் அணைத்துக்கொள்கின்றான். முதுமை -முதுமைசான்ற சரீரம். அடைப்பதற்கு இயலாத பெருமை - ஒரு எல்லையுள் வைத்து எண்ண இயலாதபடி மிகுந்துள்ள பெருமை.

(5) 'இதுதான் இருப்பதேயாயின்' என்று முன் அலான்ஸோ சொன்னதைத் தழுவிக் கன்ஸாலோ இதனைக் கூறுகின்றான். ''நான் காண்பது உண்மை என்று என்னால் துணியவும் இயலவில்லை, உண்மை அன்று என்று மறுக்கவும் இயலவில்லை. ஆகையால், உண்மைதான் என்றும் சத்தியம் செய்யமாட்டேன், அன்று என்றும் சத்தியம் செய்யமாட்டேன்—என்பது பொருள்.

(6) நுண்ணிய மாயையால் உங்கள் மனம் இன்னும் சூழப்பெற்றிருப்பதால் ஒன்றையும் நிச்சயமென்று கொள்ளமாட்டேன் என்கின்றீர்—என்பது பொருள்.

(7) நீங்கள் அரசனைக் கொலைசெய்ய முயன்றதை அவனுக்குச் சொல்லி, நீங்கள் துரோகிகள் என்பதை ஸ்தாபித்து, அவன் தன் வெகுளியை உங்கள்மீது செலுத்தும்படி, எனக்கு இஷ்டமுண்டானால் நான் செய்யலாம். ஆயினும் நல்ல இந்த வேளையில், நான் கோள் ஒன்றுஞ் சொல்லக் கருதவில்லை—என்பது பொருள்.

'கதை கழறல்' என்னும் வாசகம் ஆங்கில வழக்கில் 'கோள் சொல்லல்' எனப் பொருள்படும்.

(8) ''நான் அரசனுக்குத் துரோகம் செய்ய முயன்றது இவனுக்கு எப்படித் தெரியும்! இவனென்ன பேய் பிடித்தவனோ! இவனைப் பிடித்திருக்கும் பேய்தான் இதனைத் தெரிந்து பேசுகின்றதோ!—என்பது பொருள்.

(9) 'இல்லை' என்று ப்ராஸ்ப்பீரோ கூறியது தான் முன் 'கதைகளொன்றுங் கழறேன்' என்றதை மீண்டும் வற்புறுத்தி 'அங்ஙனம் செய்யேன்' எனச் செப்பியதாகலாம்; அல்லது ஸபஸ்ட்டியன் ஒரு புறமாய்ச் சொன்னதை ப்ராஸ்ப்பீரோ தன் மந்திர சக்தியால் அறிந்து,''இல்லை, பேயொன்றும் என்னிற் பேசவில்லை, நான்தானே பேசுகின்றேன்'' எனக் கூறியதும் ஆகலாம்.

(10) என் மைந்தனை இழந்த நஷ்டத்தை நான் இனி எதனைக்கொண்டு ஈடுசெய்வேன். பொறுத்திருந்தால் பின் ஒரு நாள் இத்துயரம் ஆறிவிடும் என்பதற்கும் இல்லை—என்பது பொருள்.

எங்களுக்குச் சொல். இந்தக் கரைமீது கடிகையோர் மூன்றின்முன் உடைந்து சிதறுண்ட எங்களை நீ எங்ஙனம் எதிர்ப்படலாயினுய்; இவ்வயின்—அந் நினைவின் நுனி எத்துணைக் கூரியதாயுளது—என் அருமை மைந்தன் பர்டினண்டை இழந்துளேன்.

ப்ராஸ்ப்பீரோ:—அன்னதற்கு, ஐய, யான் துயர் மிகக் கூர்கின்றேன்.

அலான்ஸோ:—இந்த நஷ்டமோ ஈடுசெய்ய மாட்டாதது. தன்னுல் ஆற்றுதற்கியலாததென்று பொறுமையும் சொல்கின்றது (10).

ப்ராஸ்ப்பீரோ:—அதன் உதவியை நீ நாடியதில்லைபோலும் என்றே எண்ணுகின்றேன் நான்; மெல்லிய அதன் தயையால், அன்னதோர் நஷ்டத்திற்கு யான் பேருதவி பெற்று அமைதியுடன் அமர்ந்திருக்கின்றேன் (11).

அலான்ஸோ:—அன்னதோர் நஷ்டம் நீயுமா! (12)

ப்ராஸ்ப்பீரோ:—அத்துணை அண்மியது, எனக்கு அத்துணைப் பெரியது (13). நின்னை ஆற்றுதற்கு நீ அழைக்க வல்லவைகளினும், அரிய என் நஷ்டத்தைத் தாங்குதற்கு மிக நொய்ய சாதனங்களே உடையேன் யான் (14). ஏனெனில், நான் என் புதல்வியை இழந்துவிட்டேன் (15).

அலான்ஸோ:—உன்னொரு புதல்வியையா! ஓ தெய்வங்காள். அவ்விருவரும் நேப்ல்ஸில், அரசனும் அரசியுமாக அங்கு வாழ்ந்திருந்தாலாகாதோ (16)! அன்னவாறவர் ஆக யான் என் மைந்தன் கிடக்கின்ற அச் சேற்றுப்பள்ளியில் மண்ணுண்டிருப்பதற்கே விழைகின்றேன் (17). எப்பொழுது உன் புதல்வியை இழந்தனை நீ?

ப்ராஸ்ப்பீரோ:—இந்தக் காற்றுமழையிற்ருன் (18). இப்பெருமக்கள், தலைப்பட்ட இதனின் தம் அறிவினை விழுங்குமளவு இறும்பூதெய்தித் தம் கண்கள் உண்மையாய உத்தியோகம் செய்கின்றனவென்றேனும் தம் மொழிகள் இயற்கையாய உயிர்ப்புத்தான் என்றேனும் எண்ணுதற் கரியராயிருக்கக் காண்கின்றேன் (19). உந்தம் பொறிகளினின்று நீங்கள் எவ்வளவுதான் எறியப்பெற்றுக் கிடந்தாலும், நான் ப்ராஸ்ப்பீரோ என்பதும், மிலானிலிருந்து தள்ளப்பட்ட அந்தத் தலைவனே என்பதும் நிச்சயமாய் அறிந்துகொள்ளுங்கள். நீங்கள் உடைந்து சிதறிய இந்தக் கரையின்கண், அதன் தலைவனுக, மிகவும் விந்தையுறத் தரை சேர்ந்தான். (20) இப்பொழுது இதுபற்றி மேலொன்றும் வேண்டா; நாளுக்கு நாள் நவில நிற்கும் சரித்திரம் இது, உணவருந்துங்கால் இயம்பி முடிப்பதற்கியல்வதன்று, முதன்முறைக் கண்டவளவில் கழறத்தக்கது மன்று (21). ஐய, இனிது வருக; இக்குகையே எனது சபை; ஏவலாளர் எனக்கிங்குச் சிலரும் இலர்; வெளியிலே குடிகளோ ஒருவரும் இல்லை. தயைசெய்து உட்புறம் நோக்க வருக. என் அரசினை எனக்கு நீ மீண்டும் அளித்தமையால், அதற்கு நிகரான நல்ல தொன்றினுல் நினக்குக் கைம்மாறு புரிவேன். மற்று, என் அரசு எனக்களித்த அமைதியினளவு நினக்கும் அளிப்பதற்குரியவோர் விந்தையையேனும்விளைவிப்பேன் (22).

(11) அதன் உதவி - பொறுமையின் உதவி. உன்னைப் போன்ற வோர் நஷ்டமே நானும் அடைந்திருக்கின்றேன். எனினும் நான் முயன்று நாடிய பொறுமை எனக்குத் தன் இனிய உதவியைச் செய்திருக்கின்றது. நீ நாடியிருப்பாயாஞல் உனக்கும் செய்திருக்கும் - என்பது பொருள்.

(12) நீயுமா—'அடைந்திருக்கின்ருய்' என்பது சொல்லெச்சம்.

(13) அண்மியது - சமீபகாலத்தில் நேர்ந்தது. "நீ மூன்றுமணி நேரத்திற்கு முன்தான் உன் மைந்தனை இழந்தாயென்ருல், நான் என் மகளை இழந்தும் அவ்வளவு நேரந்தான் ஆகிறது. உனக்கு அந்த நஷ்டம் எவ்வளவு பெரியதோ, அவ்வளது பெரியதே எனக்கும் இந்த நஷ்டம் என்பது பொருள்.

(14) உன் மகனை இழந்தாலும், உனக்கு ஒரு மகள் க்ளாரிபல் இருக்கின்ற நினைவைக் கொண்டேனும் அத்துயரை ஒருவாறு தாங்கலாம். எனக்கிருந்தது ஒரேமகள் ஆதலால், அவளை இழந்த துயரைத் தாங்குதற்கு வேறு சாதனம் அற்றவனுக இருக்கின்றேன்-என்பது பொருள்.

நீ அழைக்க வல்லவைகள் - உன் உதவிக்குக் கொள்ள வல்ல சாதனங்கள் - க்ளாரிபல் இருக்கின்ற நினைவு, முதலியன.

(15) அவள் பர்டினண்டை மணந்துகொண்டு தன்னை விட்டுப் பிரிந்து போவாள்என்னும் பொருளில் 'இழந்தேன்' என்று கூறுகின்ருன்.

(16) உண்மையில் அவ்வாறே அவ்விருவரும் வாழ்வாரென்பதை ப்ராஸ்ப்பீரோவும், இந்நாடகத்தைக் காண்பாரோம் இப்பொழுதுஅறிவாராஞலும், அவ்வுண்மையையே அலான்ஸோ ஓராமலேனும் உரைத்துவிடுகின்ருன்!

(17) நான் சாவதால் அவர் அரசனும் அரசியும் ஆகக் கூடுமாஞல், நான் கடலினடியில் என் மைந்தனுக்குப் பதிலாய்ச் செத்துக்கிடக்கவும் இசைகின்றேன்—என்பது பொருள்.

(18) ...என் மகளை இழந்தேன்-என்பது சொல்லெச்சம். இந்தக் காற்றுமழை காரணமாகப் பர்டினன்ட் மிராண்டாவைக்கண்டுமணங்கொள்ளப் பெறுகின்ருஞதலின், இவ்வாறு கூறுகின்ருன்.

(19) பெருமக்கள் - அங்கிருந்த எட்ரியன் ப்ரான்ஸிஸ்க்கோ முதலிய பிரபுக்கள்.

தலைப்பட்ட இதனின் - நாம் சந்திக்க நேர்ந்த இதனுல். இறும்பூது-ஆச்சரியம். கொண்ட ஆச்சரியத்தினுல் அவர் அறிவினை விழுங்கி விட்டவர்போல் திகைத்திருக்கின்றனர். தம் கண்கள் பார்ப்பன உண்மையே என்றேனும் தாம் பேசும் மொழிகள் இயற்கையாகத் தம் வாயினின்று வரும் காற்றினுல் வருகின்றன வென்றேனும் எண்ணமாட்டாமல் மனந் தடுமாறுகின்றனர்—என்பது பொருள்.

(20) உங்கள் பொறிகள் எவ்வளவுதான் தம் தொழிலைச் செய்யமாட்டாமல் கலங்கிக் கிடந்தாலும், நிச்சயமாக இதனை உணருங்கள்—என்று ப்ராஸப்பீரோ தன் செய்தியைச் சொல்கின்ருன்.

(21) நான் மிலானிலிருந்து தள்ளப்பட்டதுமுதல் இங்கு நீங்கள் என்னைச் சந்திக்க நேர்ந்தவரையில் நிகழ்ந்த இப்பன்னிரண்டு வருடச் சரித்திரம் மிகப் பெரியதாதலின், இப்பொழுது ஒரு முறையில் ஒரு நாளில் சொல்லிமுடிக்க இயலாது; பிறகு, நாளுக்கு நாள் சிறிது சிறிதாகச் சொல்லி முடிக்கின்றேன்—என்பது பொருள்.

(22) என் அரசினை அளித்தாயாதலின் அதற்குக் கைம்மாருக உன் மைந்தனை உனக்கு யான் மீண்டும் அளிக்கின்றேன்; இக்குகையினுள் வா; அதுதான் யான் சபையிருக்கும் இடம்; எனினும், எனக்கு ஆள்களும் இல்லை, குடிகளும் இல்லை. சிலரும் இலர் - என்றது காலிபன் ஒருவன்மாத்திரம் இருப்பதைக் கருதியே போலும்.



# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[740-வது பக்கத் தொடர்ச்சி]

வெளிநின்றே மறையும் விந்தை.

முன் மனம்வருந்தி யழிந்துநின்ற இராமனுக்கு ஏற்றன கூறி அவனை ஆற்றியவாறே ஜடாயு இப்பொழுது அன்னவன் வெகுளி தணிவதற் குரியன உரைத்த பெற்றியைக் கம்பர் உரைக்கின்ருர்—

இவ்வழி நிகழும் வேலை
எருவைகட் கிறைவன் யாதும்
செவ்வியோய் முனியல் வாழி
தேவரு முனிவர் தாமும்
வெவ்வலி வீர நின்ஞல்
வேறுமென் றேமுற் றுய்வார்
எவ்வலி கொண்டு வெல்வார்
இராவணன் செயலை யென்ருன்

[இவ்வாறு அண்டங்களெல்லாம்அஞ்சி நடுங்கியபோது, கழுகுகளுக்குத் தலைவனுன சடாயு, "செம்மை வாய்ந்தவனே, நீ வாழ்வாயாக, ஒன்றும் வெகுளாதே, வெவ்விய வலிமையுடைய வீரனே, தேவரும் முனிவரும் உன்னைக் கொண்டு அரக்கரை வென்று அழித்தொழிக்கலாம்என்று மகிழ்ந்து உயிர்வைத்திருக்கின்ருர். இவ்வண்ணம் நீ கோபத்தால் அவசமுற்றுப் போவாயாயின்பின் எந்தவலியைக் கொண்டு இராவணனுடைய கொடிய செயல்களை வெல்லக்கூடியவ ராவார்]

என்று இராமன் முனிவர்க்கும் தேவர்க்கும் புரிய வேண்டிய கடமையை நினைவுசெய்து, பிறகு சீதையைக் கொண்டேகிய இராவணனைத் தடுக்காதது தேவர் பிழையன்றென்பதை விளக்கும்பொருட்டு,

நாட்செய்த கமலத் தண்ண
லல்கின நவையி லாற்றல்
தோட்செய்த வீர மென்னிற்
கண்டனை சொல்லு முண்டோ
தாட்செய்த கமலத் தானே
முதலினர் தலைபத் துள்ளாற்
காட்செய்கின் ருர்க ளன்றி
யறஞ்செய்கின் ருர்கள் யாரோ

[புதிய தாமரையில் வீற்றிருக்கும் பிரம்மன் வரமளித்த குற்றமற்ற ஆற்றலால் இராவணன் தன் தோள்கொண்டு செய்த வீரத்தை அவனுக்குத் தோற்ற என்னிடத்திலே காண்கின்ருய். வேறு சொல்லவும் வேண்டுமோ. தாளுடைய தாமரையில் இருக்கும் பிரம்மன் முதலிய தேவர்கள், தலை பத்துடைய இராவணனுக்கு அடிமை செய்கின்ருர்கள் அன்றித் தங்கள்தருமத்தைச் செய்கின்றவர் யார் இருக்கின்ருர்]

தெண்டிரை யுலகந் தன்னிற்
செறுநர்மாட் டேவல் செய்து
பெண்டிரின் வாழ்வ ரன்றே
யிதுவன்றே தேவர் பெற்றி
பண்டில களந்தோ னல்கப்
பாற்கட லமுத மந்நாள்
உண்டில ராயி னிந்நா
ளன்னவர்க் குய்த லுண்டோ

[தெளிந்த அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட உலகத்தில், தேவர்கள் அனைவரும் இராவணஞதிய அரக்கர்களாகிய தம் பகைவர்களுக்கு அடிமைசெய்து, வலியற்ற பெண்பாலார்போல் வாழ்கின்ருர். முன் உலகை அளந்த திருமால்பாற்கடலிலிருந்து கடைந்துகொடுத்த அமிர்தத்தை உண்ணுதிருந்தனராயின், இவர் உயிரோடு இப்பொழுது இருக்கக்கூடுமோ]

எனச் சடாயு எடுத்துக் காட்டினுன். இராவணன்செயலைத் தேவர்களால் தடுத்திருத்த லாகாதென்பதற்கு இதனினும் வலியதொன்றும் இயம்பவேண்டா. "இத்துணைச் செயலற்று இராவணராதியரால் இடுக்கண் அடைந்திருப்பவர்தமைக் காத்தலல்லது வெகுண்டழிக்கப்புகுவது, இராமா, உனக்குப் போதுமோதான்" என்ற சடாயு, தேவர்களன்றி இனி உலகத்தின்பால் இராமபிரான் தன் பெருஞ் சீற்றத்தைச் செலுத்தாவண்ணம்—

வம்பிழை கொங்கை வஞ்சி
வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க்
குலப்பழி கூட்டிக் கொண்டீர்
அம்பிழை வரிவிற் செங்கை
யையன்மீ ராயுங் காலை
உம்பிழை யென்ப தல்லா
லுலகஞ்செய் பிழையு முண்டோ

[அம்புகளைத் தொடுக்கின்ற கட்டமைந்த வில்லையேந்திய சிவந்த கைகளை உடைய நம்பிமார்களே, தோல்கச்சுக்கட்டிய கொங்கைகளையுடைய வஞ்சிக்கொடிபோன்ற சீதையைத் தனியாக இருக்கவிட்டு, கொம்புகளையுடைய மானின்பின்போய் உங்கள் குலத்திற்குப் பழியைச் சேர்த்துக்கொண்டீர். யோசிக்குமளவில் இது உங்கள் குற்றமாகுமே யல்லாமல், இதனின் உலகம் செய்தகுற்றம் யாதேனும் உளதோ]

என இராமன்மீது குற்றமுஞ்சார்த்தி இடித்துரைக்க நேர்ந்தனன். இராமன் துயருற்று அழிந்தபோது அவனை ஆற்றுதற் குரைத்த கொள்கையினின்று, அவன் முனிவினை அடக்குதற்கு உரைத்த இது சிறிது மாறுபடுகின்றது. சீதையைத் துறக்கலாயது விதியின் செயலேயன்றி இராமனது பிழையன்று எனப் பொருள் தரும் மொழிகளைச் சடாயு அவ்வயின் கூறலாயினுன். இடுக்கண் ஒன்று வந்துற்றகாலை, தன் பிழையால் அது நேர்ந்ததென்னும் நினைவுதான் அத்துன்பத்தை என்ஞான்றும் ஆறவிடாமல் கனற்றிக்கொண்டிருக்குமாதலின், "நேர்ந்ததொன்றும் நின் பிழையால் விளைந்ததன்று, மைந்த, விதியின் செய்கையால் சேர்ந்ததாம் அது" எனச் சடாயு, இதயத்தின் நுட்பமெல்லாம் நுனித்தங்கு நவின்றனன். மற்று, வெகுளியின் வேகமோ வேமுர் வகைத்து. 'எப்பிழையும்யான் இழைக்காதிருக்க, எனக்கு இப்பிழை செய்தாரைப் பிய்த்தெறிகின்றேன் காண்" எனப்பொங்கும் சூழ்ச்சி கோபத்திற் குரியது. அக்கோபத்தைத் தடுப்பதற்குப்பிறர் பிழைகள் இழைத்திலர் என்று அறிவுறுத்தப்பெறுவதுமட்டும் போதாது. குற்றமற்றவர் என்பது தெரிந்தபின்னுங் கொண்ட கோபமோ குறைவதில்லை. ஷேக்ஸ்ப்பியர் எழுதிய ஜூலியஸ் ஸீஸர் என்னும் நாடகத்தில், ஸீஸரைக் கொன்ற சதியாளர்மீது மார்க் ஆன்டனியால் வெஞ்சினம் மூட்டப்பெற்ற நகர

சனங்கள் அன்னவரைத் தேடித் தெருவில் மண்டுங்கால், ஸின்ன என்னும் ஒரு புலவனை எதிர்ப்பட்டு, அவன் சதியாளர்களில் ஒருவன் அல்லன் என்பது தெரிந்தபின்னும், அவனை வதைக்க நேர்ந்ததைப் பின் வருமாறு காட்டுகின்றார்:—

மூன்றும் நகரவாசி:—உன்பேரோ, ஐயா, உண்மையாக?

ஸின்ன:—உண்மையாக என் பெயர் ஸின்ன.

முதல் நகரவாசி:—துண்டுதுண்டா யிவனைக் கிழித்தெறியுங்கள்; சதியாளர்களில் ஒருவன் இவன்.

ஸின்ன:—நான் புலவன் ஸின்ன, நான் புலவன் ஸின்ன.

நான்காம் நகரவாசி:—அவன் புன்கவிகளுக்காகக் கிழித்தெறியுங்கள்.

ஸின்ன:—சதியாளன் ஸின்ன அல்லன் நான்.

நான்காம் நகரவாசி:—அது பொருளில்லை; இவன் பெயர் ஸின்ன. இவன் இதயத்தினின்று இவன் பெயரைமாத்திரம் பறித்துக்கொண்டு இவனை அனுப்பிவிடுங்கள்.

மூன்றும் நகரவாசி:—கிழியுங்கள் இவனை, கிழியுங்கள் இவனை.

அங்கம் 3, களம் 3 (5-வது வால்யூம் 488-வது பக்கம்)

ஸின்ன என்னும் பெயரினைக் கேட்டதும் அச் சதியாளர்களில் ஒருவனுகிய ஸின்ன என்பான் இவன்தான் என்று பொங்கிய சனங்கள், இவன் அவனல்லனென்பதும், அந்தப் பேருடைய வேறோர் புலவனே என்பதும் தெரியக்கேட்டு அவன்பாற் பிழையில்லை என்பதை உணர்ந்துகொள்ளவல்ல நிலையினராயினர். எனினும், அவனது குற்றமின்மை, இவர் முன் கொண்ட கோபத்தைக் குறைத்தற்கு இயலாததாயிற்று.

இவ்வண்ணம், குற்றமற்றவர் பிறரெனக் கொண்டு தம் கோபம் தணியான் இராமன் என்பதை, உணர்வு சோர்ந்த உயிர் நீங்குந் தறுவாயிலும் சடாயு அறிந்தனன். மற்று, தன் குற்றத்தின் நினைவொன்றே ஒருவன் கோபத்தைத் தணிவிக்கும் என்பதையும் அறிந்தனன். அறிந்து, "உம்பிழை என்பதல்லால் உலகஞ் செய் பிழையுமுண்டோ" என இராமனையே மிக வெகுண்டான்போல் கழறி,

ஆதலான் முனிவா யல்லை
யருந்ததி யனைய கற்பிற்
காதலா டுயர நீக்கித்
தேவர்தங் கருத்து முற்றி
வேதநூன் முறையின் யாவும்
விதியுளி நிறுவி வேறுந்
தீதுள துடைத்தி யென்றான்
சேவடிக் கமலஞ் சேர்வான்

[ஆதலால், கோபங்கொள்ளாதே. அருந்ததியை ஒத்த கற்புடைய உன் காதலியின் துயரத்தை நீக்கி, தேவர்களுடைய எண்ணத்தையும் நிறைவேற்றி, எல்லாவற்றையும் வேதசாஸ்திரங்களின்விதிப்படிநிலைநிறுத்தி, மற்றுமுள்ள தீமைகளையும் தீர்த்திடுவாய் என்றான்—இராமபிரானது திருவடிகளை அடைவானுகிய ஜடாயு]

சடாயு இறுதியிற் கூறிய சொற்கள் கருதிய பயனைத் தந்தன. நீர்கிழிய எய்த வடுப்போல் சிரொழுகு சான்றோர் சினம் ஆறுமாதலின்—

புயனிற வண்ண னுண்டப்
புண்ணியன் புகன்ற சொல்லைத்
தயரதன் பணியி தென்னச்
சிந்தையிற் றழுவி நின்றான்
அயலினி முனிவ தென்னை
யரக்கரை வருக்கந் தீர்க்குஞ்
செயலினிச் செயலென் றெண்ணிக்
கண்ணிய சீற்றந் தீர்ந்தான்

[மேகத்தின் நிறமுடைய இராமன், புண்ணியனுகிய சடாயு சொன்னசொல்லை, இது தயரதனது கட்டளையே என மதித்துத் தன் மனத்தில் ஏற்றுக்கொண்டு, இனி, பிறரைக் கோபிப்பதால் என்ன பயன் உளது, அரக்கரைக் குலத்தோடு அழிக்கும் செயலே இனிச் செய்யத் தக்க செயல் என்று எண்ணித் துவக்கிய கோபத்தைவிட்டான்]

இராமன் கோபத்தை விட்டான் என்பது தெரிந்ததோ இல்லையோ என்னுமுன் சடாயுவும் தன் உயிரை விட்டு,

சீதங்கொண் மலரு ளோனும்
தேவரு மென்ப தென்னே
வேதங்கள் காண்கி லாமை
வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணிற் பார்த்தான்
படிவங்கொ ணெடிய பஞ்ச
பூதங்கள் விளியு நாளும்
போக்கிலா வுலகம் புக்கான்

[குளிர்ந்த தாமரைமலரில் உள்ள பிரம்மனும் தேவர்களும் காண்பதற்கு அறியாதவன் என்பது ஒரு பொருளோ. வேதங்களும் காணமாட்டாமல், வெளியில் நின்ற வண்ணமே மறைகின்ற திருமாலாகிய இராமனது பாதங்களைத் தரிசிக்கப்பெற்றானுதலின், பெரிய உருவங்களைக் கொண்ட பஞ்சபூதங்கள் அழியும் கற்பாந்த காலத்திலும் அழியாத வைகுண்டத்தை அடைந்தான்]

அண்ணல் சடாயுவின் உயிர் தீர்தலோடும் எம்மனோர் உள்ளத்தை உழக்குகின்ற வோர் ஐயமும் தீர்தல்வேண்டியிருக்கின்றது. நிகிலப்பொருள்கள்யாவையும் ஆக்கித் தானே யாவும்ஆகின்ற அத்தனிப்பெரும் பரம்பொருளேயோ ஆகுலத்தாலும் அடுக்காதசீற்றத்தாலும் அவசமுற்று அழிதலும் அழித்தலும்நேர்ந்து நிற்றல் என்பதை நினைக்குங்கால் மானுடமனம் பல்வகைச் சிந்தனைகளுள் நீந்திநீந்திக் கரைகாணமாட்டாமல்சலிப்படைந்து சோர்வடைந்து திகைப்பது இயற்கையன்றித்தக்கதுமாகும். ஆதலின், அத்தகையமனத்திற்கு அமைதியளிப்பதோர் கருணையும் கடமையும் பூண்டுள கம்பர்பெருமான் விரையவந்துதவும் வரம்பிலா வண்மையால், "வேதங்கள்காண்கிலாமைவெளிநின்றே மறையும்வீரன்" ஒருவன்தன் திப்பிய சரிதமே இது என்பதை நினைவுசெய்து நிறுவுகின்றனர். மூலப் பழமறைக்கு முன்னே செல்லும் சூழ்ச்சி மாத்திரமன்றி அம்மறைகள் தாம் தொடர்வதை விட்டு வேறோர் நெறியால் எதிர்வர நேரினும், இம்முழுமுதல் மெய்ப்பொருள், ஒளிவதற்கியலாத வெள்ளிடை நடுவே நின்றவாங்கே தோன்றுமல் மறைந்து தீர்கின்ற மாயம் வாய்ந்த தன்றே. அவன்பால் அன்புடையோர் காணுமிடந்தோறும் கண்ணனுய்ப் புலப்பட்டுத் தலையளி புரிபவனுயினும் ஆராய்ச்சிக்கோ அகப்படுகின்றானல்லன். வெளிநின்றே மறையும் வீரத்தின் வாய்மை இது. அன்னவன் கருத்தழியக் கலுழ்வதும் கதங்



கொண்டு கொதிப்பதும் புரிவானேல் அதுதான் மாய நாடகம்என்பதனை அறிந்துகொண்டு அமைவது அருமையன்று. இதனை அறிய முயல்பவர், அவன் பாதங்களைக்கண்ணிற்கண்ட சடாயுவைப்போல்,நனிஉய்ந்து போக்கிலாவுலகம் சிறிது புக்கவராவார்.

பெருந்தகைச் சடாயு கடவுட் சேவகத்தில் தன் ஆருயிர் விட்டனன். இராமனே இன்னும் இரங்குவானுகி—

அறந்தலை நின்றி ராத
அரக்கனி னாண்மை தீர்ந்தேன்
துறந்தனென் றவஞ்செய் கேனே
துறப்பெனே வுயிரைச் சொல்லாய்
பிறந்தனென் பெற்று நின்ற
பெற்றியாற் பெற்ற தாதை
இறந்தன னிருந்து ளேன்யான்
என்செய்கே னிளவ லென்றான்

[தம்பியே, தருமத்தில் நிற்காத அரக்கனுல் நான் என் ஆண்மையை இழந்தவனுனேன். இனி முற்றுந் துறந்து தவம்செய்யப் புகுவேனே; அல்லது உயிரையே விட்டுவிடுவேனே, எதனைச் செய்யலாம் சொல். நானும் பிறந்தேன், என்னை மகனுகப் பெற்றமையால் பெற்ற அந்தத் தந்தை இறந்தான், பிறந்த நானே இருக்கின்றேன். என்ன செய்வேன் என்று கூறினுன்.]

கூனொடு சேர்ந்து சிறிய கோத்தாய் இழைத்த கொடுமைதான் விதியின் பிழையெனப் பண்டைநாள் இராகவன் தனக்குக் கூறிய மதியினை இப்பொழுது செலுத்துதற் குரிமைகொண்ட இலக்குவன், ஆரியன் மொழியே கொண்டு அவனை ஆற்றுகின்றனன்.

என்றலு மிளைய கோவவ்
விறையினை யிறைஞ்சி யாண்டும்
வென்றியாய் விதியின் றன்மை
பழியல விளைந்த தொன்றோ
நின்றினி நினைவ தென்னை
நெருக்கிய வரக்கர் தம்மைக்
கொன்றபி னன்றோ வெய்ய
கொடுந்துயர் குளிப்ப தென்றான்

[என்று இராமன் கூறவும், (அதனைக்கேட்டு) இளையவனுகிய இலக்குவன், தலைவனுன இராமனை வணங்கி, வெற்றியுடையவனே, விதியினுல் அன்றி நமக்கு விளைந்த பழி ஒன்றுஉண்டோ. இனிக் கழிவிரக்கத்தோடுசிந்தித்து நிற்பதால் யாதுபயன். அந்த அரக்கர்களை அடர்ந்து கொன்றபின் அன்றே, கொடிய துயரத்தில் முழ்கவேண்டும்—என்றான்.]

எந்தைநீ யியம்பிற் றென்னை
யெண்மைய னுகி யேழைச்
சந்தவார் குழலி னளைத்
துறந்தனை தணிதி யேனும்
உந்தையை யுயிர்கொண் டானை
உயிருண்ணு மூற்ற மில்லாச்
சிந்தையை யாகி நின்று
செய்தவஞ் செய்கை யென்றான்

[என் தலைவா, நீ எளிமையை மேற்கொண்டு, அழகிய நீண்ட கூந்தலையுடைய பேதையாகிய சீதையைக் கைவிட்டுத் தவம்செய்யப் போவதே தக்கதென்று தணிவாயினும், உன் தந்தையைக் கொன்றவனைக் கொல்லவேண்டுமென்னும் ஊக்கம் இல்லாத மனமுடையவனுய் நின்று, செய்வதற்குரிய தவத்தினைச் செய்தலைக் கூறியது என்ன—என்றான்]

இளவல்தன் சொற்கள் கேட்டு இராமனும் தான் கருதிய செயலின் எளிமையை உணர்ந்தவன்போல் பாவித்து, தன் கண்ணின்று பொழியும் நீரினை விலக்கிச்சடாயுவிற்குரிய சாமக்கிரியைகள் அனைத்தும் நேர்முறை யிபற்றி முடித்தான். அவ்வண்ணம்,

பல்வகைத் துறையும் வேதப்
பலிக்கடன் பலவு முற்றி
வெல்வகைக் குமர னின்ற
வேலையின் வேலை சார்ந்தான்
தொல்வகைக் குலத்தின் வந்தான்
துன்பத்தாற் புனலுந் தோய்ந்து
வெல்வகைக் குரிய வெல்லாஞ்
செய்குவா னென்ன வெய்யோன்

[வெற்றிகொள்ளவல்ல இராமன், பலவகைச் சடங்குகளையும், சாத்திர விதிப்படி கொடுக்கவேண்டிய பிண்டம் முதலிய பலிகளையும் முடித்து நின்றபோது, சூரியன், பழைமையானதன்குலத்திலே தோன்றினவனுகிய சடாயு இறந்தபடியால் உண்டான துன்பத்தோடு தானும் நீரில் முழுகிஅவன் செல்லுங்கதிக்கு உதவுகின்ற சடங்குகளைச் செய்பவன் என்னக் கடலை அடைந்தான்]

சடாயு வுயிர்நீத்த படலம் முற்றிற்று.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
பாதாமி லேகியம் ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம் 2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம் 2-0-0
குழந்தைகளுக்கு
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை 0-4-0
பால சஞ்சீவினி 0-4-0
பால ஸுதா (டானிக்) 1-0-0



தைலங்கள்:
சந்தனாதி 6 அவுன்ஸ் ரூ. 1-0-0
அமிர்தாமலக „ 0-12-0
பிருங்காமலக „ 0-12-0
ஸ்திரீகளுக்கு
ஸூதக டானிக் 2-0-0
கர்ப்பாசய டானிக் 2-0-0
ப்ரஸவ லேகியம் 1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ச்யாவனப்ராச
பிருங்காமலக தைலம்
கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது)
மெடிகேட்டட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

கஸ்டாலகஸ்

ஜவரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

# வர்த்தமானம்

ஜெர்மனியில் புது முயற்சி:—ஜெர்மனியில் ஏகேச்சாதிகாரம் நடத்திவரும் ஹிட்லர், பெண்கள் உத்தியோகம் செய்வதைத் தடைசெய்து வருவது எல்லோருக்கும் தெரியும். அவர் ஜெர்மனி தேசத்தின் சமுக நலனை ஒட்டிச் செய்துவரும் பலவற்றில், பரம்பரையாக நோய்களால் வருந்துவோரையும், சித்தஸ்வாதீனமில்லாதவர்களையும் இரண சிகிச்சை மூலம் மலடாக்கவேண்டுமென்று முடிவுசெய்துள்ளார். அத்தகையவர்களுக்குப் பிறப்பவர்களால் ஜெர்மனிக்கு நலன் ஏற்படாது என்பது அவரது அபிப்பிராயம். இந்த ஏற்பாடு 1934 வருஷம் ஜனவரி மாதம் அமுலுக்கு வருமென்று தெரிகின்றது.

* * *

ரூபியத்:—பாரசீக நாட்டுச் சிறந்த கவிகளில் ஒருவரான உமார் கயாம் என்பவர் இயற்றிய ரூபியத் என்னும் நூலின் முதற்பதிப்பைச் சமீபத்தில் இங்கிலாந்தில் ஒரு கனவான் 205 பவுன் கொடுத்து வாங்கியுள்ளார் என்று தெரிகின்றது.

* * *

சிறகில்லா விமானம்:—வான் டி லா என்னும் ஓர் ஆராய்ச்சியாளர் சிறகுபோன்ற கருவி அமைக்காமல் ஓர் ஆகாய விமானத்தைக் கட்டியிருக்கின்றார். இவ்விமானம் மணிக்கு 300லிருந்து 400மைல் வரை செல்லுமாம். இப்புதிய விமானம்கட்டுவதற்குச்செலவும் அதிகம் ஆகின்றதில்லையாம்.

* * *

ரேடியம்:—ரேடியம் என்பது அரியதோர் உலோகம். அது விலை உயர்ந்தது. ஒரு கிராம் நிறையுள்ள உலோகம் 2 லட்சம் ரூபாய் விலையுடையதாம். அமெரிக்க நியூயார்க்கிலுள்ள வயித்தியசாலையில் 10 கிராம் ரேடியம் இருக்கின்றதாம். பஸிபிக் மஹா சமுத்திரத்தின் அடியில் ரேடியம் அதிகமாக இருக்கின்றது என்று கண்டுபிடித்திருக்கின்றனராம்.

* * *

பந்தும் பாவையும்:—பேரரசர்கள் தங்கள் கோட்டையின் வாயிலில் பாவைபோன்ற சிலையை நிறுத்தி அதனருகில் ஒரு பந்தைத் தொங்கவிடுதல் பண்டைக் கால வழக்கமாம். பகைவர்களைப் பெண்களாகப் பாவித்து, அவர்கள் வந்தால் இப் பந்தை யெடுத்து ஆடுவதற்கே உரியவர்கள் என்ற கருத்தை இந்தச் சின்னம் தெரிவிக்குமாம்.

* * *

தழை:—பண்டை நாளில் மாந்தர் உடுத்த உடைக்குத் தழை என்று பெயர். இது தழைகளாலும் மலர்களாலும் கட்டப்படுமாம். காதலர்கள் தங்கள் காதலிகளுக்குச் சிறந்த தழையுடைகளைத்தான் கையுறையாகக் கொண்டு செல்வார்களாம்.

* * *

விளம்பரத்திற்கு 40 கோடி:—லண்டனிலுள்ள லீவர் பிரதர்ஸ் என்னும் சன் லைட் சோப் கம்பனியார் கடந்த 18 வருஷங்களில் சன் லைட் சோப் விளம்பரத்திற்காக 40 கோடி ரூபாய் செலவழித்திருக்கின்றனராம்.

* * *

பெரிய அச்சுக்கூடம்:—வட அமெரிக்காவில் இருக்கும் ஒரு அச்சுக்கூடம் தினம் ஒன்றிற்கு ஒருலக்ஷம் புஸ்தகங்களை அச்சிடுகின்றதாம்.

* * *

ஒரு ஜோஸியம்:—மகர ராசியில் 7 கிரகங்கள் ஒன்றாயிருக்கையில் 1934-வருடம் பிறக்கும். 1914-ம் வருஷமும் அப்படித்தான் பிறந்தது. எனவே சென்ற மகாயுத்தம்போல் 1934-வாண்டு இறுதிக்குள் ஒரு பெரிய யுத்தம் ஏற்படும் என்று ஒரு வங்காள சோதிடர் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

* * *

சீனத்து மூவேந்தர்:—ராமநாதபுரம் சமஸ்தான வித்வான், ஸ்ரீமான் ராகவ ஐயங்கார் கூறுவதாவது:—

"நமது தமிழ்நாட்டில் மூவேந்தர் இருந்ததுபோல் சீனாவிலும் சிறந்த மன்னர் மூவர் இருந்திருக்கின்றனர் என்று தெரிகின்றது. பூஹி என்னும் வேந்தன் வில்லில் விலங்குகளைக் கொன்று ஜனங்களைக் காத்தான் என்றும், ஹண்டி என்னும் வேந்தன் நால் நூற்பதும் புலவர்களை ஆதரிப்பதும் செய்தான் என்றும், ஷோஹன் என்பவன் வயித்திய சாஸ்திரத்தை வளர்த்து விவசாய அபிவிர்த்தியில் ஈடுபட்டான் என்றும் சீன சரித்திரத்தில் கூறப்படுகின்றது. ஹாண்டி என்பது பாண்டியன் என்னும் பெயருக்கும் ஷோஹன் என்பது சோழன் என்னும் பெயருக்கும் ஒத்ததாயிருக்கின்றது. பூஹி என்னும் பதத்திற்குப் பூபதி என்பது பொருள். இவ்வொற்றுமை கூர்ந்து கவனிக்கற்பாலது."

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children. }

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)